விலை சதம் 50 ★ பக்கங்கள் — 10

சகலவித பல் வியாதிகளையும்
போக்கவல்லது
அண்ணா பற்பொடி
இலங்கையின்
எப்பாகத்திலும் கிடைக்கும்.
கூடுதலாக அண்ணா
பற்பொடியை வாங்கும்
வியாபாரிகளுக்கு விசேடகழிவுண்டு
அண்ணா தொழிலகம்
இணுவில்
தொலைபேசி: 7412

# ஈழநாடு
## வார மலர்
THE EELANADU VARAMALAR

'கந்தர் சஷ்டி கவசம்'
10 மில்க்வைற் நில சோப் அல்லது 2 பார்சோப் அல்லது 2 நிம் சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி நூலைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

மலர் 20 | ஐப்பசி 12 | ஜுலை 26 | ஞாயிற்றுக்கிழமை | (29—10—78) | இதழ் 260

### மொழி - கல்வி - உத்தியோகம்

# 'தமிழர் குறைகளை அகற்ற முயற்சி செய்கிறேம்"

## டில்லியில் ஜனாதிபதி ஜே. ஆர்

புதுடில்லி, அக். 28

இலங்கையில் தமிழ் மக்களுக்கு மொழி, கல்வி, உத்தியோகம் ஆகியவற்றில் உண்மையான குறைபாடுகள் இருக்கின்றன என்று இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. திர். ஜெயவர்த்தன புதுடில்லியில் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்குமாகாணங்களில் தமிழ் மொழியை உத்தியோக மொழியாகப் பயன்படுத்துவது, தமிழுக்கு தேசிமொழி அந்தஸ்து உட்பட தமிழர்கள் கேட்ட சகலதும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்த திரு. ஜெயவர்த்தன, தமிழர் விடுதலைக் கூட்டணி எம் பிக்கள் தமது அரசாங்கத்தில் சேர விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும் கூறினார்.

புதுடில்லியில் திரு ஜெயவர்த்தன நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில், இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னை குறித்து நிருபர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினர்.

தமிழ் மக்களின் உண்மையான குறைபாடுகளை அகற்ற இன்றைய இலங்கை அரசு நட-

(10-ம் பக்கம் பார்க்க)

## நடிகை ருக்மணிதேவி கார் விபத்தில் பலி

(கொழும்பு)

பிரபல சிங்களப்பட நடிகையும், பாடகியுமான ருக்மணி தேவி நேற்று வத்தளையில் இடம்பெற்ற கார் விபத்தில் மரணமானர்.

1938-ம் ஆண்டுமுதல் நடிப்புத்துறையில் ஈடுபட்டு வந்த திருமதி ருக்மணிதேவி இலங்கையில் தயாரான சில தமிழ்ப் படங்களிலும் அண்மையில் நடித்துள்ளார். நாளை கொழும்பில் இசை நிகழ்ச்சியொன்றில் அவர் கலந்துகொள்ளவிருந்தார்.

பிரபல சிங்கள நகைச்சுவை நடிகா ஒடிஜெயமன்னவின் மனைவியான ருக்மணி தேவி சிங்களத் திரைப்பட உலகின் ஆரம்பகால நடிகையுமாவார்.

நேற்று திருமதி ருக்மணி தேவி பிரயாணம் செய்த கார் பெட்ரோல் பௌஸருடன் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது. கார்ச் சாரதியும் ஸ்தலத்திலேயே மரணமானர்.

## யாழ். வருகிறார்

[கொழும்பு]

சமூகசேவைகள் அமைச்சர் திரு. அசோகா கருணாரத்ன அடுத்தமாதம் 2ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்கிறார். [ம-இ]

## 8 மணிவரை பொலிஸ் அனுமதி

(யாழ்ப்பாணம்)

தமிழ் இளைஞர் பேரவையினர் யாழ். கோட்டை மைதானத்தில் நடத்தவுள்ள பொதுக்கூட்டத்துக்கு இன்று மாலை ஐந்து மணி முதல் இரவு 8 மணிவரை பொலிஸ்

(10-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் ஈழக்கோரிக்கையும் மாவட்ட மந்திரி பதவியும்!

## இன்று கூட்டணி செயற்குழு, இளைஞர் பேரவை ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

'தமிழ் ஈழம்' அமைப்பதற்குப் பாராளுமன்றத்தை ஒரு களமாக உபயோகிப்பது போல தமிழ் ஈழத்தை மீட்பதற்குத் தமிழ்ப் பகுதிகளைப் பொருளாதாரத்துறையில் முன்னேற்றுவதற்கு முதற்படியாக மாவட்டங்களை அபிவிருத்திசெய்வதற்கு மாவட்ட அமைச்சர் பதவிகளைத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் மாவட்ட அமைச்சர் பதவி தமிழ் ஈழப்போராட்டத்தில் ஒரு தங்குமிடமாக அமைந்துவிடுமாதலால், அதை ஏற்றுக் கொள்ளக்கூடாதென்றும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள்ளும் அதனைச் சார்ந்த தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவை ஆகியவைகளுக்குள்ளும் ஏற்படுத்தியுள்ள கருத்துவேறுபாடு இன்று வெளிப்படையாக ஒரு புதிய அரசியல் பிரச்னையை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

தலையிருக்க வாலாடக்கூடாதென்றும் அமரர் தந்தை செல்வநாயகம் அடிக்கடி கூறி வந்ததுபோல் 'நாய் வாலை ஆடவேண்டுமே தவிர வால் நாயை ஆட்டக்கூடாது' என்பதற்கிணங்க தமிழ் ஈழம் பெறுவதற்குத் தலைவர்களுக்கு உதவியாக இருந்து அவர்களுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டியதுதான் இளைஞர்களின் கடமையாக இருக்க வேண்டுமேயன்றி தலைவர்களை வழி நடத்துவதற்கு இளைஞர்கள் முன்வரக்கூடாதென்றும் இதனால்தான் இன்று பெரும் பிரச்னை ஏற்பட்டுள்ளதென்றும் கருதும் கூட்டணி எம். பிக்கள் சிலர் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளையே துறப்பதற்கு முன்வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

## கூட்டத்தை ஒத்திவைக்கும் முயற்சி தோல்வி

இன்று மாலை யாழ். நகரில் தமிழ்இளைஞர் பேரவையினர் நடத்த விருக்கும்

(10-ம் பக்கம் பார்க்க)

குறைந்த செலவில் பென்னங்-சிங்கப்பூர் செல்லலாம்
குளிரூட்டப்பட்ட உல்லாசக் கப்பல்
நவீன வசதிகள் நிறைந்தது
'M.V. Chidambaram'
திருமலை துறைமுகத்திலிருந்து
நவம்பர் 23-ந் திகதி புறப்பட்டு, டிசம்பர் 7-ம் திகதி மீண்டும்
திருமலை வருகிறது
கட்டணம்: ரூ. 3380 முதல் ரூ. 6820 மட்டுமே
[சென்று திரும்புவதற்கு]
மாணவர்களுக்கும், உல்லாச பயணக்குழுக்களுக்கும் சலுகையுண்டு
மேலதிக தகவல்களுக்கு:
ரஸ்ட் ரவல் சேவிஸ்
(TRUST TRAVEL SERVICE)
11/A. மொம்ஸாக் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்

# இராமேஸ்வரத்தில் இயந்திரப் படகுமீது சூடு!

## இலங்கையர் ஒருவர்பலி; இருவர்கைது

சென்னை, அக். 23

ராமேஸ்ரத்துக்கு அண்மையில் இலங்கையருக்குச் சொந்தமான கடத்தல் படகு ஒன்றின் மீது இந்திய சுங்கப்பகுதியினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் இலங்கைப் பிரஜை ஒருவர் கொல்லப்பட்டார்.

30 ஆயிரம் ரூபா பெறுமதியான வெள்ளியும், நைலோன் வலைகளும் படகிலிருந்து கைப்பற்றப்பட்டன. இயந்திரப் படகுடன் இரண்டு இலங்கைப் பிரஜைகளும் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த வியாழன் இரவு இச்சம்பவம் நிகழ்ந்தது. [இ]

## கைத்தறியாளர் கஷ்டம்:

# அமைச்சரிடம் முறையிட வள்ளுவர் மகாசபை முடிவு

[யாழ்ப்பாணம்]

'கைத்தறிக்குப் பாவிக்கப் படும் நூல்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் கைத்தறி நெச வாளர்கள் பாதிப்படைகிருர் கள். இவர்களின் உற்பத்திப் பொருள்களையும் விற்பனை செய்யமுடியாதிருக்கிறது.

இவ்வாறு திருவள்ளுவர் மகாசபை நிறைவேற்றியுள்ள தீர்மானம் ஒன்றில் தெரிவிக் கப்பட்டிருக்கிறது.

காரைநகர் வலந்தலையில் நடைபெற்ற மகாசபையின் நிர்வாகசபைக் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

கைத்தறி நெசவாளர் படும் கஷ்டம் குறித்து கைத் தொழில் அமைச்சருக்கு மக ஜர் ஒன்று அனுப்பிவைப்ப தென்றும் அவரைப் பேட்டி காணவேண்டுமென்றும் தீர மானிக்கப்பட்டது.

'வள்ளுவ மக்கள் வாழும் பகுதிகளில் மகாசபையின் கிளைகளை அமைக்கவேண்டு மென்றும், தற்பொழுது செயல்படாமல் இருக்கும் கிளைகளை புனரமைப்புச் செய்யவேண்டுமென்றும், சிறு பான்மைத்தமிழர் ஐக்கிய முன்னணியின் அடுத்த கூட் டத்தை 18-11-78 சனிக் கிழமை யாழ்ப்பாணச் சன் மார்க்க வாலிபர் சங்கமண்ட பத்தில் நடத்துவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. ] அரியாலை நிரு-உ



யாழ். கல்வித்திணைக்களத்தில் நடைபெற்ற மரம் நாட்டு விழாவில் 'மரம நடுகையின் பயன்களும் அத சிறப்புக்களும்' பற்றி 'பல்கலைச் சக்கரவர்த்தி' ரமேஷ் வைகுந்தநாதன் பாடிக்கொண்டிருக்கிருர். வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர், மில்க்வைற் அதிபர் திரு. கே. கனகராசா ஆகியோரும், நல்லூர் சாதனை பாடசாலை அதிபருடன் மாணவர்களும் படத்தில் காணப்படுகின்றனர். (இ)

## கௌரிவிரதம்

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலில் கேதார கௌரி விரதமும், நவோத் திர சகஸ்ரச சங்காபிஷேக மும் எதிர்வரும் செவ்வாய்க் கிழமையும் புதன்கிழமையும் நடைபெறும். இவ்வாலயத் தில் ஏறக்குறைய இருநூறு அடியார்கள் கௌரி நோன்பு வரதம அனுஷ்டிக்க முன் வந்துள்ளனர், செவ்வாய்க் கிழமை மாலை இவற்றுக்கான விசேட பூசைகளும் கௌரிக் காப்பு அணியும் வைபவமும் நடைபெறும். அடுத்த நாள் புதன்கிழமை காலை 9 மணிக்கு நவோத்திர சகஸ்ர சங்கா பிஷேகம் ஆரம்பமாகும். பகல் 12 மணிக்கு அம்பாள் வீதியுலாவுடன் திருவிழா நிறைவுபெறும்.

### விநாயகர் பிரதிஷ்டை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் வேம்படி சித்திவிநாயகர் ஆல யத்தில் கடந்த வெள்ளிக் கிழமை பிள்ளையார் விக்கிர கம் பிரதிஷ்டை செய்யப்பட் டது. வர்த்தகர் திரு. தியாகு சண்முகலிங்கம் இந்த விக்கிர கத்தை அன்பளிப்புச்செய் தார்.

### பாகவதர் நினைவு இசைவிழா

(யாழ்ப்பாணம்)

எம். கே. தியாகராஜ பாக வதர் நினைவு இசை விழா அடுத்த மாதம் 1-ம் திகதி யாழ். றிம்மர் மண்டபத்தில் நடைபெறும்.

திருமதி சத்திய பாமா இராஜலிங்கத்தின் மாணவி கள் இந்நிகழ்ச்சியில் இசை விருந்தளிப்பார்கள். (ம)

### புதிய நோட்டு

[கொழும்பு]

மத்திய வங்கி விரைவில் புதிய 50 ரூபா நோட்டு ஒன்றை வெளியிடவுள்ளது. 70-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25-ம் திகதி புளக்கத் திற்கு வந்த நோட்டின் அள விலான புதிய நோட் பழைய நோட்டுடன் புளக்கத்திலிருக் கும். (இ)

விவசாயிகளே! வாகன உரிமையாளர்களே!!
உங்களுக்குத் தேவையான
∴ உரவகைகள்
இறக்குமதிசெய்யப்பட்ட
∴ ரயர், ரியூப் வகைகள்
∴ சிமெந்து
∴ பாலுணவு வகைகள்
இன்றே நாடுங்கள்:
ச. வி. முருகேசு
நம். 154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தந்தி: எஸ்.வி.எம். தொலைபேசி: 564
0678

வட மாகாண விவசாயிகளுக்கு
ஒரு வரப்பிரசாதம்
- நீர் இறைக்கும் பம்புகள் (மின்சாரத்தில் இயங்குவன)
- நீர் இறைக்கும் பம்புகள் (மண்ணெண்ணெயில் இயங்குவன)
- களைக் கொல்லிகள் எம். சி. பி. ஏ; 3-4 டி. பி.ஏ
- கிருமிநாசினி
- பங்கசு தடுப்பு மருந்து வகைகள்
- யந்திர தெளி கருவிகள்
- கை தெளிப்பான்கள்
- உரக்கலவைகள்
- பம்புகள், தெளிகருவிகளுக்குரிய உதிரிப்பாகங்களும்
மற்றும்
பம்ப், தெளிகருவிகள் திருத்தும் வசதிகளும்
மிகக் குறைந்த விசேட விலையில் கிடைக்கும்.
மார்க்பெட் 111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 504. 0693

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

முரசுமோட்டை, தரும புரம், பரந்தன் ஆகிய இடங் களில் 31-10-78 செவ்வாய் பனம்விதை விநியோகம் நடை பெறும் விதை நாட்டி மரம் உண்டாக்க விரும்புபவர்கள் முன்கூட்டியே தொடர்பு கொண்டு பெற்றுக் கொள் ளுங்கள். மில்க்வைற், யாழ்ப் பாணம். 0697

புத்தூர் மேற்கு நவற்கிரி யில் (நிலாவரைக்கு அண்மை யில்) மெதடிஸ்த மஷன பாட சாலைக்கு அருகாமையில் உள்ள எமது சாணியாகிய மாகையப்புலம் நில. பர. 35 விற்பனைக்கு உண்டு. இதில் ஒரு பகுதி தோட்ட நிலமாக வும் மறுபகுதி மேட்டு நில மாகவும் உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சேனாதிராசா வித்தியானந் தன் அன் பஞ்சலிங்கம் வருஞே தயம், பாடசாலை ஒழுங்கை, புத்தூர் மேற்கு. புத்தூர். 0692

நல்ல நிலையிலுள்ள EN தொடர்பிலக்க TRIUMPH (Speed Twin) மோட்டோர் சைக்கிள் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு:- மலாயன் றேடியோ சேவிஸ். 45, கஸ்து ரியார் வீதி, யாழ்ப்பாணம். 0698

### தேவை

கணக்காளர் தரம் II

பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

சம்பளத்திட்டம்:-
ரூபா 400/- — ரூபா 650/-
15/10 — 20/5

விண்ணப்பகாரரின் தகுதி. அனுபவம் என்பனவற்றைக் கருத்தில் கொண்டு மேற் கூறப்பட்ட சம்பளத்திட்டத் தில் ஏற்றதொரு நிலையில் நியமிக்கப்படுவர்.

தகைமை:
1. ஒரு வருடகால அனுப வத்துடன் கணக்கிய லினை ஒரு பாடமாகக் கொண்ட பட்டதாரி, அல்லது
2. ஒரு வருடகால அனுப வத்துடன் கொழும்பு கிரேட்ட தொழில் நுட் பக்கல்லூரியில் கணக்கி யலில் பெற்ற டிப்பு ளோமா, அல்லது
3. கூட்டுறவு வேலையாளர் உயர்தரத் தராதரப்பத் திரத்துடன். அத்தகைய ஓர் நிறுவனத்தில் பெற் றுள்ள இரண்டுவருட கால அனுபவமும்,
4. 7 வருடகால அனுபவம் பொருந்திய மூன்னைய நாட் கூட்டுறவுப் பரி சோதகர்.

வயது: 25—40

விண்ணப்பங்கள் யாவும் பொதுமுகாமையாளர், பண் டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம் என்னும் விலாசத் திற்கு 15-11-1978 பி. ப. 4-00 மணிக்கு முன் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படு தல் வேண்டும்.

பதில்
பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்புப் பரிஷ்
ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு. 0653

### விற்பனைக்கு

சுதுமலை அம்மன் கோவில் தெற்குவீதியில் மெயின்ரோட் அருகில் வீட்டுடன் (கட்டப் பட்ட குறையில்) காணி விற் பனைக்குண்டு விபரங்களுக்கு: Dr. சிவனேசன், நாயன்மார் கட்டுவைத்தியநிலையம், (நவீன சந்தை முன்பாக) 160, ஆஸ் பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 0673

### தேவை

ஈரப்பலாக் கன்றுகள் தேவை. மில்க்வைற்- யாழ்ப் பாணம். 0674

கொழும்பில் நன்கு ஸ்தா பிக்கப்பட்ட நம்பிக்கையும் நாணயமும் உள்ள நகைக் கடை, அடைவுகடைக்கு வைப்புப் பணம் தேவை. பொறுப்பிற்கு நோட்டு அல் லது காசோலை கொடுக்கப் படும். வருடம் 24% வட்டி கொடுக்கப்படும் விரும்பினுல் வட்டி ஒவ்வொரு மாதமும் எடுக்கலாம் மேல் விபரங்க ளுக்கு விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 0690, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம் 0690

யாழ். நகரில் பிரபல்யம் வாய்ந்த ஒரு ஸ்ருடியோவுக்கு ஆங்கில அறிவுடைய பெண் காசாளர் தேவை. யாழ். மாந கரசபை எல்லைக்குள் வசிப்பவ ராக இருக்க வேண்டும். விண் ணப்பிக்கவும் விளம்பர இல: 0669 C/o ஈழநாடு, யாழ்ப்பா ணம். 0699

### வகுப்புகள்

1-11-78 முதல் எமது கல்விநிலையத்தில் மின்னியல் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட வுள்ளன. கூடிய செய்முறை வகுப்புக்கள் அடங்கியது. விபரங்கட்கு: Institute of Air Conditioning, 615, ஆஸ் பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0652

### WANTED

Dental Surgeons, School Dental Nurses. Principal Dental Surgeon in Jaffna with 7 years experience in Zambia and U. K.. intending to open Dental Surgeries at Stanley Road, and Hospital Road, Jaffna wants 2 Dental Surgeons, 2 School Dental Nurses and 6 smart girls with very good knowledge of English to be trained in Dental Surgery work immediately. Apply with details Advt. No 0675, C/o Eelanadu Ltd., Jaffna. 0675


### நன்றி நவிலல்

பெஞ்சமின்செல்வநாயகம்

சுண்டிக்குளியைச் சேர்ந்த இளைப்பாறிய தபால் அதிப ரும், ஹோமியோபதி டாக்ட ருமான காலஞ் சென்ற திரு. பெஞ்சமின் செல்வநாயகம் அவர்களின் மரணச்சடங்கிற்கு வருகை தந்தும், மலர் வளை யங்கள் அளித்தும், அனுதா பச் செய்திகள் அனுப்பியும் ஆறுதல் அளித்த உறவினர் கள், நண்பர்கள். சுற்றத்தவர் கள் அனைவருக்கும் தங்களின் மனப்பூர்வமான நன்றியைத் திருமதி ஹனி பாலசுந்தரம். ஸ்ரான்லி, கிங்ஸ்லி, ரிக்ஸி ஆகியோர் தெரிவித்துக் கொள்கின்றனர். தனித் தனியே நன்றிகூற இயலா மைக்கு வருந்துகின்றனர். 'பெஞ்சமின் இல்லம்', கொழும்புத்துறைவீதி, சுண் டிக்குளி. 0686

### நன்மரண நினைவாஞ்சலி

திரு. அன்ரனி சூசைப்பிள்ளை
மறைவு: 29-10-1977.
திருமதி சுவாஞ சூசைப்பிள்ளை
மறைவு: 30-10-1977.
எங்கள் பிதா மாதா நல்லடக்கம் 31-10-1977.
ஆத்மசாந்திக்கு மன்றுடுவோம்.
மக்கள். மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
திருமதி நீற்றுசெல்வம் சென்ஜோர்ஜ் வஷிங்டன்,
புதுக்குடியிருப்பு. 0670



# எப்போது தீபாவளி?



காவலூர் எஸ். ஜெகநாதன்

[1]

நாளை விடிந்தால் தீபாவளி. ஊரெல்லாம் ஒரே கொண்டாட்டமாகிவிடும்.

நீராடி புத்தாடை புனைந்து இனிப்புகள், பலகாரங்கள் என்று ஆசைதீர சுவைத்து மகிழ்பவார்கள். பட்டாசு வெடிகள் ... தீபதோரணங்கள்...

வருடத்தில் ஒரு நாள், எவ்வளவு குதூகலம். கொண்டாட்டம்...;

தனது கிராமம்படப்போகும் அல்லோல கல்லோலத்தை நினைத்துப்பார்த்தான்.

இந்தமுறையும் செல்லையர்தான் வெற்றியடைவார். அவரை மிஞ்சி எவரும் வெடி கொளுத்திவிடமுடியாது. தன்னிடமுள்ள காசுமுழுவதையுமே வெடியாக்கி கொளுத்துவதுபோல் வெடித்துத்தள்ளுவார்.

கமலாம்பிகைக்கு கால் ஓய நேரமிருக்காது. ஒரே தையல் வேலையாகத்தான் இருக்கும், ஊர் முழுவதுக்கும் உடுப்புத் தைப்பதென்ருல் சும்மாவா?

நாளை கிராமத்து வாலிபர்களெல்லாம்சீட்டாடுவார்கள். மது அருந்துவார்கள்.

மகிழ்ச்சியின் வெளிப்பாடுகளாம் அவை. மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது தீயபழக்கங்களை செய்வதுதானு?பலவீனத்தை வெளிப்படுத்துவதுதான் மகிழ்ச்சியா?

தீபாவளி அரக்கனை அழித்துவிட்டநாளாம்?

அரக்கன் அழிந்துவிட்டானு? என்னவோ கொண்டாடுகிருர்கள்.

அவனுக்கு இந்தத் தீபாவளியில் ஒரு முக்கியத்துவம் இருந்தது. முன்னரெல்லாம் அவன் தீபாவளிக்கு வீட்டுக்குப் போனுல் தாய் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருப்பாள். குடி கூத்தென்று ஊர் கெட்டுக்கிடக்கும் அந்த நேரத்தில் மகன் வந்திருக்கிருனே 'சுத்தமாக, அனுப்பிவிடவேண்டுமே என்பதில்தான் கவனமாக இருப்பாள். பழகிவிட்டால் பின் அதுவே பழக்கமாகிவிடும் என்ற பயம். வாலிபரோடு சேரவிடமாட்டாள்.

இப்போது... கண்ணிறைந்த மனைவி கடிதம்போட்டிருக்கிருள். தலைத் தீபாவளி. இவ்வளவு காலமும் கொண்டாடாததற்கு எல்லாம் சேர்த்து இம்முறை கொண்டாடவேண்டும் என்ற ஆவல்.

நாளை விடிந்தால் அந்தநாள் விடிந்துவிடும்,

கொஞ்சம் கொஞ்சமாக தன் பெட்டியின் பாரத்தைக் கூட்டிவைத்திருந்தான். மலைநாட்டிற்கேயுரிய சில தனித்துவமான பொருட்கள். தேயிலை, கொக்கோ, கோப்பி... இப்படிச்சில.

நேற்றுவரை இங்கு நிற்கவேண்டிய, அவசியம் இருந்தால் மனைவிக்கும் தாய்க்கும பிடவைகளைப் பார்சலிலேயே அனுப்பிவிட்டான். மாலையில் புறப்பட்டால்போதும். தீபாவளியின் அதிகாலைப்பொழுதில் மனைவியின் முகத்தைக் காணலாம்

இப்போதென்று அவனை முதல்நாள் நினைவுகள் முற்றுகையிட்டன.

நாலைந்து மாணவர்கள் வீட்டுக்கு வந்திருந்தார்கள். அவர்களின்கைகளிலெல்லாம் அரிசி' காய்கறிகள்...புரியாமல் விழித்துக்கொண்டு நின்ருன்...

''பெருநாளுக்கு ஊருக்குப் போறீங்கதானே சேர்... அது தான் அவனுக்குக் கோபமாக வந்தது.

''என்ன இது...''

''இப்படித்தான் எல்லா சேர்ங்களுக்கும் குடுக்கிறது.',

''அவங்களாகவே கேட்டாங்களா:''

''வழக்கம்தானுங்களே!''

மலைநாட்டுக்கு மாற்றலாகி வந்து சில மாதங்கள்தான் ஆகிறது. அந்த வழக்கங்களெல்லாம் அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

''நீ காலையில என்ன சாப்பிட்டனி'' - ஒரு மாணவனிடம் ஆதரவாகக் கேட்டான்.

''ஒன்னுமில்ல சேர். வீட்டில ஒன்னுமில்ல.''

''நீ என்ன கொண்டுவந்திருக்கிருய்''

''அரிசி சேர்...'' அவனுக்கு உள்ளம் கொதித்தது. சீ... என்ன புத்தி என்று எண்ணியபடி அவர்களை அனுப்பிவிடடான்.

முதல் நாள் மாலை நாலைந்து மாணவிகள் வந்திருந்தார்கள்.

''சேர் பெருநாளுக்கு ஊருக்குப் போறீங்களா?''

''ஆமா அதுக்கென்ன உங்களுக்கு ஏதும் கொண்டுவரவேணுமா?''

அவர்கள் சிரித்துவிட்டார்கள்.

''சேர் மா இடிக்க வேணுமா...மிளகாய் இடிக்க வேணுமா...? நாங்க வேலை செய்துதரத்தான்'' கோபம் அவனுக்குப் பொதுக்கென்டு வந்தது.

''இப்பிடித்தான் எல்லா மாஸ்ரர்களுக்கும் செய்வீங்களா?'' அவர்கள் தலையாட்டினர்கள். கோபத்துடன் அவர்களை அனுப்பிவிட்டான. படிக்கவென்று வரும் பிள்ளைகளிடம் வேலைவாங்குவது எவ்வளவு அரக்கத்தனம்.

[2]

மலையகப் பாடசாலைக்கு மாற்றம் கிடைத்து வந்து சேர்ந்தபோது அவன் இப்படியொரு சூழலை நினைத்துப் பார்க்கவில்லை. எத்தனை துயரம்...தாங்கமுடியாத துன்பம். எல்லாவற்றுக்கும் காரணம் மனித வடிவில் இருக்கும் விலங்குகள்தான்.

வாழவழியற்ற ஏழைகளிடம் எத்தனை விதமானசுரண்டல். படிக்க வந்த மாணவர்கள் ஆசிரியர்களுக்கு பொருட்களைக் கொடுக்கவேண்டும். வேலைசெய்து கொடுக்கவேண்டும். அவன் நினைவு அதனைத் தொட்டு ஒரு வாரததுக்கு முன்பாக நீள்கிறது.

பெரிய வகுப்பு மாணவர்கள் பலர் அவனது குவாட்டயில் வந்துமொய்த்திருந்தார்கள். இளைஞன் என்பதால் அவன்மீதுதான் அவர்களுக்கு அளவற்ற பற்று. அவாகள் வந்த காரணம் சிந்தனையைக் கிளறியது. தீபாவளிக்கு அடுத்துவரும் முதலாம் திகதி புது அதிபர் வருகிருராம்.

அது அவனுக்கு ஏற்கனவே தெரிந்ததுதான். எவ்வளவு மகிழ்ச்சியடைந்தான். இப்போதுள்ள அதிபர் எவ்வளவு கொடுமையானவர். மாணவர்களிடம் பணம், பொருட்கள் இப்படியெல்லாம் சுரண்டி ஊரில் மாடி வீடு கட்டிக் கொண்டிருக்கும் இவர்போய் புதியவர் வரப்போகிருர். அவனது மகிழ்ச்சியில் இடியாக விழுந்தது இளைஞர்கள் கூறிய செய்தி.

புதிதாக வரப்போகும் அதிபர் முன்னரே இருந்தவர் தானும். மீண்டும் இப்போது அவராகவே முயற்சிசெய்து வருகிருரென்ருல் ...ஓ... ருசி கண்ட பூனை.

''மாணவியரின் வரவு இனி குறைந்துவிடும்'' என்ருர்கள். அந்தக் காமுகன் வந்தால் யார் படிக்க வருவார்கள்?

விடிந்தால் தீபாவளி. மனைவி வழிமேல் விழிவைத்துப் பார்த்திருப்பாள். மாலை பயணமாக வேண்டும். பெட்டி பொருட்களெல்லாம் ஆயத்தமாகிவிட்டன-

காலைச்சூரியன் சுட்டெரிக்கத்தொடங்கியபோதும் முற்றத்தில் இருந்த கதிரையில் அமர்ந்தபடி மனதை எங்கோ விட்டிருந்தான். அதுவும் பாழாய்ப்போன இந்தக் கொடிய சமுதாயவீதியல நடந்தது-அந்த வீதியில்தான். எத்தனை விலங்குகள்...அரக்கர்கள்.

[3]

அதிபரின் இடமாற்றக்கடிதம் வந்ததற்கு அடுத்தநாள் இப்போதுள்ள அதிபர் பெற்ருேர்களை அழைத்து ஒரு கூட்டம் வைத்தார். தான் தொடர்ந்தும் இந்தப் பள்ளிக்கூடத்திலேயே இருந்துவிடுவதற்கான முயற்சி அது. கூட்டத்திற்கு வந்திருந்த இராமையா கூறியது இப்போது போல் அவன் காதில் ஒலிக்கிறது.

இராமையாவின் மூத்தமகன் ஒரு வீட்டில் வேலைக்கு இருந்தான். அவன் கிணற்றில் விழுந்து இறந்துவிட்டதாக செய்தி வந்து அவர்போனது அவனுக்குத் தெரியும். இப்போது கொதித்துப்போய் அவர் கூறுவது...!

இப்படியும் ஒரு கொடுமையா என்று அவன் குமுறி வார்த்தைகளைக் கொட்டிய போது அவர் சொன்னர். ''என்ன மாஸ்ரர் இதைப் போய் எத்தனை அநியாயம் நடக்குது நம்ம லயத்தில. ஒரு பொம்பிளைப்பிள்ளை வாயும் வயிறுமா வந்துசேர்ந்திருக்கு... வேலைக்குப் போன இடத்தில...''

என்ன கொடுமை இது! பணத்தைப் பொருட்களைத் தான் சுரண்டுகின்ருர்களென்ருல் இப்படியும் ஒரு சூறையாடலா?

அரக்கன் இன்னும் அழியவில்லை-அரக்கர்கள் பெருகியிருக்கிருர்கள். பலவீனமான பயிர்களில்தான் நோய்கள் சுலபத்தில் தாக்கும். வாழவழியற்ற அந்த ஏழைகளிடம தான் இநத சுரண்டல்காரர்களும் பல வடிவங்களில் பெருகியிருக்கிருர்கள்.

இதையெல்லாம் எண்ணிப் பார்க்காமல் இருக்க அவனுல் முடியவில்லை. இளைஞன்புதுமை நாடும் இளைய தலைமுறையைச் சேர்ந்தவன். இந்தக்கொடுமைகளைக் கண்டபின் அரக்கர்களை இனக்கண்டபின் அமைதியாக இருக்கமுடியவில்லை

எத்தனை வடிவங்களில் அரக்கர்கள். ஓ...அரக்கன் செத்துவிட்டதாக அந்த நாளைத் தீபாவளி என்று நாளை கொண்டாடப்போகிருர்கள். அரக்கன் மறுபிறவி எடுத்தபோது பல்லாயிரம் ஜீவனுக மாறிவிட்டானே? அவனது மறுபிறவிகள்தான் இந்த சமூகத்துக் கொடுமைகளைப் புரியும் அரக்கர்களோ?

நாலைந்து நாளுக்கு முன் பாடசாலைக்கு அண்மையில் உள்ள தோட்டத்தில் பரபரப்பூட்டிய செய்தியை உருப்போட்டுப் பார்த்தான்.

தோட்டத்துரைக்கு அங்கிருந்த ஒரு தொழிலாளியின் மகள்மீது ஒரு கண். தருணம் பார்த்து அலைந்திருக்கிருன். அவளோ இளவாழைக் குருத்துப் போன்றவள். குருத்துத்தானே என்று குருட்டுத்தன்மாக நெருங்கியிருக்கிருன். அவள் நெருப்பு என்று காட்டியிருக்கிருள்.

எட்டாத பழம் புளிக்கும் என்று நினைக்க அவள் உடற்கட்டு விட்டுவிடவில்லை. ஒரு நாள் அந்தப் புலியின் பிடியிலிருந்து அவள் தப்பியபோது தன் வேடம் கலைந்துவிடுமென்று பயந்து மலைக்காட்டில் வைத்து தள்ளிவிட்டிருக்கிருன். புல்லறுக்கப்போனவர்கள் கண்டுவிட்டதால் தோட்டம் முழுவதும் பரபரப்பாகிவிட்டது. அதனுல் என்ன?

அவன் இப்போதும் 'பெரிய துரை'யாகத்தான் பவனி வருகிருன். எப்படியாவது வாழவேண்டும் என்ற நிலையில் உள்ள தொழிலாளரும் ஊமையாகிவிட்டார்கள்.

நாளை அரக்கனைக்கொல்ல வரக்கூடாதா? இந்த அரக்கர்களையெல்லாம் யார் கொல்வது?

உலகத்தில் மனிதர்கள் குறைந்துவருவது போலவும் அரக்கர்குலம் தழைத்தோங்குவதுபோல் இருக்கிறது. அப்படியென்ருல் அரககன அழிந்துவிட்டான் என்று தீபாவளியைக்கொண்டாடுவதில் என்ன அர்த்தம்.

நாலைந்து நாட்களுக்கு முந்தியே லீவெடுத்துக்கொண்டு போயிருப்பான். அதிபர்தான் குறுக்கிட்டார். சனிக்கிழமை பள்ளிக்கூடத்தில் தீபாவளி கொண்டாடப் போவதாகவும் அவன் கட்டாயம் கலந்து கொள்ளவேண்டுமென்றும் நிர்ப்பந்தித்தார். அதுகூடப் பெற்ருேர்களின் ஆதரவைத் தன்மீது திருப்புவதற்குத்தான்!

தன்னைச் சூழ அரக்கர்களை வைத்துவிட்டு தீபாவளி கொண்டாடுவதில் அர்த்தமில்லை என்று எண்ணினுன். மனச்சாட்சிக்கு மாருக அவனுல் மூச்சுவிடக்கூட முடியவில்லை.

நாளைவிடிந்தால் தீபாவளி... வெடிச்சத்தங்கள் காதைப் பிளக்கும் புத்தாடைபுனைந்து கூடி மகிழ்வார்கள். குடியும் கூத்துமாக கும்மாளமடிப்பார்கள்

அரக்கன் அழிந்த நாளாம். எவ்வளவு பேதமை;

அவன் பயணத்தை ஒத்திவைத்தான். மனம் உறுதி செய்துகொண்டது முதலில் உண்மையான அரக்கர்கள் அழியவேண்டும். அப்போதுதான் தீபாவளி.

(யாவும் கற்பனை)


அசொட்ரின்

நெல், மிளகாய், வெங்காயம்
மரக்கறி, பருத்தி, புகையிலை
ஆகியவற்றில் காணப்படும்
பீடைகளின் முற்றழிப்பிற்கு
அசொட்ரின் 60 பாவியுங்கள்.




சகல,
லங்கெம் விவசாய சேவை
நிலையங்களிலும் கிடைக்கும்

★ புழுக்களைக் கொல்லும் ★ பயிரைவளர்க்கும்

★ தீங்கு விளைவிக்காது ★ நிலத்தைப் பாதுகாக்கும்

# விவசாயிகளே! கோசலத்தைப் பாவித்துப்பாருங்கள்!!

விவசாய விஞ்ஞானிகளே, ஆராய்ச்சியாளர்களே, நச்சுமருந்துகளைநீக்கி கோசலத்தை கிருமிநாசினியாக மாற்றுவதில் உங்கள் ஆய்வுகள் தொடரட்டும்.

பயிர்களைத் தாக்கும் கிருமிகளைக் கொன்று ஒழிப்பதற்கும்- செயற்கைக் கிருமிநாசினிகளால் நிலம் நச்சுத்தன்மையாகாமல் காப்பாற்றுவதற்கும் நமது முன்னோர்கள் காலாதி காலமாகப் பயன்படுத்திவந்த முறைகளை இன்று நமது விவசாயிகள் பெரும்பாலும் கைவிட்டுவிட்டார்கள். செயற்கைக் கிருமிநாசினிகளால் நிலம் பாழாவதையும், புதிய வகையான நோய்கள் பயிர்களைத் தாக்குவதையும் கண்டு அவர்கள் இன்று குமைகிறார்கள்.

இப்படியான நிலைமையில் அவர்களுக்குக் கைகொடுக்கக்கூடிய அருமையான மாற்று மருந்து கோசலம்.

கோசலத்தை விவசாயத்தில் பயன்படுத்தி ஆய்வுகள் நடத்தியுள்ள கட்டுரையாளர் அதனைப் பயன்படுத்தும் முறைகள் பற்றி இங்கு விபரமாக விளக்குகிறார். (ஆ-ர்)

**ம. சண்முகம்**

வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்களைத் தாக்குங் கிருமிகள், புழுக்களைக் கொல்லக்கூடிய ஒரு கிருமிநாசினியும், பயிர்களை வளர்க்குந் தன்மையுடன் நல்ல விளைவைத் தரக்கூடியதுமான சக்திகளைக் கொண்டதும், மனிதருக்குத் திங்கற்றதுடன், நன்மை தரக்கூடியதுமான இயற்கைப்பொருள் கோசலம்.

## வெங்காயத்தாழ் கோதிப்புழுவிற்கு

ஆரம்ப காலத்தில் நிலத்திற்கு கிருமிநாசினி பாவிக்க வேண்டாம்.

## புழுக்கள் வராமல் தடுக்க

கோசலம் எடுத்து 4-5 நாட்களாயின் 1 பேணி (பால்மின் பேணி) 7, 8 நாட்களாயின் 3/4 பேணி கோசலத்தை 3 கலன் நீருடன் கலந்து காய்கள் தாழ்த்த அடுத்த நாளிலிருந்தே ஆரம்பித்து 5,6 நாட்களுக்கொருடவை நிலமும் நனையக்கூடியதாக மாலை நேரத்தில் தெளிக்கவும். 40 நாட்கள் வரை தெளித்தாற் போதும்.

## புழுக்கள் வந்தால்

கோசலம் எடுத்து 4,5 நாட்களாயின் 1 1/2 பேணி, 7,8 நாட்களாயின் 1 1/4 பேணி கோலசத்தை 3 கலன் நீருடன் கலந்து நிலமும் நன்றாக நனையக்கூடியதாகத் தெளிக்கவும். ஒரே முறையிலேயே புழுக்கள் அழிந்துவிடும். தப்பித்தவறி இருந்தால் 4,5 நாட்களால் 2-ம் முறையுந் தெளிக்கவும் முற்றாகவே புழுக்கள் அழிந்துவிடும். பின்பு புழுக்களே வராது. மேலும் புழுக்கள் வராது தடுக்கவேண்டுமாகில் முதலாவதிற் கூறப்பட்ட கலவை விகிதத்தைக் கையாளவும். கிழமைக்கொருதரம் தெளித்தாலே போதுமானது. மாலை நேரத்தில் தெளிப்பதால் நிலத்தில் சுவறி நிலத்திலுள்ள புழுக்களும் அழிவதோடு காயுடன் சேர்ந்து தாழின் உள்ளே புழுக்களையும் அழிக்க இலகுவாக இருக்கும். மாடு கட்டிய நிலத்திற்கு கிழமைக்கொருதரம் தெளித்தாலே போதும். சென்ற போகத்தில் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலத்திற்கு காய்கள் தாழ்த்த அடுத்த நாள் தெளிக்குங் கலவையில் 1/4 பேணி கூடுதலாகச் சேர்த்துத் தெளிப்பது நல்லது.

## பொது

கோசலந் தாராளமாகக் கிடைக்குமாகில் காய்கள் தாழ்த்த 20 நாளின் பின் (அதாவது மூட்டுப்பிரியத் தொடங்கிய பின்) நீரிறைக்கும் பொழுது ஒன்றைவிட்டொரு இறைப்பிற்கு 1/4-1/2 பேணி கோசல நீருடன் கலந்து இறைப்பது நல்லது. இதனால் நிலத்திலுள்ள நச்சுக்கிருமிகள் புழுக்கள் அழிவது மட்டுமின்றி இயற்கைப்பசளையாகவுமிருப்பதால் காய்கள் பருப்பதோடு நச்சுத்தன்மையற்ற சிறிது சுவைகூடிய காய்களைப் பெறவும் முடியும். சின்னவெங்காயத்திற்கு 40 நாட்கள் வரையில் இவ்விதம் செய்தால் போதும். கோசலம் பாவித்த காய்களின் தாழ்கள் உரிய காலத்தில் காய்ந்து மடிவதல்ல. 5,6 நாட்களின் பின் பிடுங்க நேரிடும். இதனால் காய்களும் பருக்க வசதியுண்டு. கோசலம் கூடினால் தாழ்கள் சிறிது பழுப்பு நிறமடிக்கும். தெளிப்பதை நிறுத்தி இறைப்பை நெருக்கினால் மாறிவிடும்.

## மிளகாய்ச்செடியும் குருமனும்

கோசலம் 4, 5 நாட்களாயின் ஒரு பேணி. 7, 8 நாட்களாயின் 3/4 பேணி 3 கலன். நீருடன் கலந்து கிழமைக்கொருதரம் தெளித்துவந்தால் குருமன் வராது தடுக்கலாம். குருமன் வரும் அறிகுறிகள் தென்பட்டால் சிறிது பச்சைச்சாணம் கரைத்து கோசலக்கலவையுடன் கலந்து தெளித்தால் குருமனைக் கட்டுப்படுத்தலாம். கோசலம் தெளிப்பதால் பயிர்கள் நல்ல கருமையுடன் செழிப்பாக வளரும். செழிப்பாக வளர்வதை மேலும் அதிகரிக்கச் செய்யவேண்டுமாகில் செடி நாட்டி 10 நாட்களின் பின் அடிச்செடிகளுக்கு நீரூற்றும் பொழுது சிறிது கோசலமும் கலந்து ஊற்றுவது நல்லது. இதனால் செடிகள் செழிப்பாக வளர்வதுடன் நோயை எதிர்க்கும் சக்தியையும் பெற்றுக்கொள்ளும். செடிகள் வளர்ந்து நன்றாகக் காய்க்கிற வரைக்கும் குருமன் வராது கட்டுப்படுத்தியிருக்கிறேன். மிகுதியை உங்கள் ஆய்விற்குத் தருகிறேன். இதற்கும் நீரிறைக்கும் பொழுது பாத்திக்குச் சிறிது (1/2 பேணி) கோசலமும் நீருடன் கலந்து இறைப்பது நல்லது. இதனால் நிலத்திலுள்ள நோய்க்கிருமிகளை அழிப்பதுடன் செடிகள் நோயை எதிர்க்குச் சக்தியைப் பெற்று நீண்ட நாட்கள் இளமையுடன் நிற்பதோடு நன்றாகக் காய்க்குந் தன்மையையும் பெறும். சிறிது காரங்கூடிய காயையும் பெறலாம். யூரியா, அம்மோனியம் சல்பெற் தேவையில்லை. கோசலங்கூடினால் சிறிது இலையுதிருந்தன்மையைப் பெறும். நெருக்கி இறைத்தால் மாறிவிடும்.

## நாற்றுமேடை

நிலத்திற்கு எந்தக் கிருமிநாசினியும் பாவிக்கவேண்டாம். எந்தவகை நாற்றுமேடைக்கும் வசதியானால் மாடு கட்டி நிலத்தைப் பண்படுத்தி ஒரு கிழமையின் பின் விதைப்பது நல்லது. அல்லது பழைய எரு இட்டு சிறிது கோசலம் தெளித்து நிலத்தைப் பண்படுத்தி, ஒரு கிழமையின் பின் விதைகளை விதைப்பது நல்லது. நாற்றுக்கள் முளைத்து ஒரு கிழமையின் பின் 4, 5 நாட் சென்றதும் 1/2 பேணி கோசலத்தை 3 கலன் நீருடன் கலந்து 2,3 நாட்களுக்கொருதடவை மேடைக்கு நிலம் நனையக்கூடியதாகத் தெளித்து வரலாம். நாற்று கெதியாக வளரவேண்டுமாகில் 3, 4 மணித்தியாலங்கள் சென்ற கோசலத்தை 4, 5 பங்கு நீருடன் கலந்து நிலத்திற்கு ஊற்றலாம். நோய் எதிர்க்கும் சக்தியைப் பெற்று வேகமாக வளரும் யூரியாவுங்கிட்ட வராது. குரக்கன் நாற்று வளர மேடைக்கு கோசலம் நீருடன் கலந்து ஊற்றுவது பழைய முறை.

## வெண்டி

மிளகாய்ச்செடிக்குரிய கலவையை உபயோகிக்கலாம். புழுக்கள் வராது.

## கீரை

4, 5 நாட்சென்ற கோசலம் 3/4 பேணி 3 கலன் நீருடன் கலந்து கலவையை கிழமைக்கொருதரம் தெளித்துவந்தால் நல்ல கருமையும் செழிப்பும் வளர்ச்சியும்பெறும். புழுக்களும் வராது. எந்தக் கிருமிநாசினியும் செயற்கை உரங்களும் தேவையில்லை. புகையிலை, கோவா போன்ற இலைப்பயிர்கட்கு இந்தமுறையைப் பின்பற்றலாம். இலைகள் பருக்கவும் செடிகள் வளரவும் உதவியாக இருக்கும். புழுக்களும் வராது. வசதியுள்ளவர்கள் செய்துபாருங்கள்.

## யூரியா, அமோனியம் சல்பைற்

மது உண்ணும் மனிதர்களின் நிலையில் நிலமும். இவற்றைஅதிகமாகப்பாவித்த நிலத்தில் பயிரை உண்டாக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள் சிலர். கைவிட்டுவிட்டார்கள் சிலர். சில இடங்களில் பயிர்கள் மிகவும் குறுகிய காலத்தில் அழிந்துவிடுகின்றன. இவற்றை பாவியாமலும் பயிர் வளர்க்க முடியாதநிலை. மேலும் மேலும் பாவித்துவந்தால் காலகதியில் பயிர் உண்டாக்க முடியாத நிலை ஏற்படலாம். நிலமிருந்தும் இல்லாத நிலை வரும். இவை நிலத்திலுள்ள சத்துக்கள் முழுவதையும் இழுத்துக் கொடுப்பதால் மண் வளமற்றதாவதுடன், நச்சுத்தன்மையும், உப்புத்தன்மையும் பெற்றுவிடுகின்றது. இதனால் நிலம் நோயை எதிர்க்கும் சக்தியை இழந்துவிடுகின்றது. பயிர்களில் நோய் பரவுவதற்கு மூலகாரணம் இதுவே. யூரியா பாவிப்பதால் கிணற்றுநீரும் நச்சுத் தன்மைபெற்றுவிடுகிறதென்பதும் அதனால் பல நோய்கள் குழந்தைகட்கு உண்டாகின்றன என்பதும் வெளிநாட்டு நிபுணரின் கூற்று. நீரும் நச்சுத்தன்மை பெறுவதாகில் நிலமும் நச்சுத்தன்மைபெற்றுவிடுமே. ஆகவே இவற்றில் உண்டாகும் உணவுப்பொருட்கள் ...! எனவே இவையிரண்டையும் முற்றாக நிறுத்துவது நல்லது. விசேடமாக வரண்ட பிரதேசத்திலுள்ளோர் இது விடயத்தில் கவனமெடுக்க வேண்டும்.

## நச்சு மருந்துகள்

இவைகளை அடுத்தடுத்தும் அளவில் கூட்டியும் தெளித்தும் வருவதால் பயிர் வளர்க்கும் கிருமிகளை அழித்து நச்சுக் கிருமிகள் நிலத்தை ஆட்கொண்டுவருகின்றனவாம். மருந்தும் நஞ்சு, உரமும் நஞ்சு, நிலமும் நஞ்சு, நீரும் நஞ்சு, உணவும் நஞ்சு. இந்த நச்சுக்கிருமிகள் மேலும் மேலும் பெருகி காற்றுடன் கலந்தால் உடல் மனோநிலையும் பாதிக்கப்படலாம். புதிய புதிய நோய்களும் தோன்றலாம். உயிரினங்களை முற்றாக அழிக்கக்கூடிய நிலையுமேற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## வெளிநாட்டுக்கிருமி

திருநெல்வேலி விவசாயப் பண்ணையில் பயிரை வளர்க்கும் கிருமிகள் வெளிநாட்டிலிருந்து கொண்டுவந்து விட்டிருப்பதாக பத்திரிகைமூலம் அறிந்தேன். வெளிநாட்டார் சொல்வதெல்லாம் முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ளக்கூடியதா? இக்கிருமிகள் பரவி வேறு தொல்லைகள் கொடுத்தால் அவற்றை அழிக்க பின்பும் வெளிநாட்டிலிருந்துதான் கிருமிகள் கொண்டுவரவேண்டும். கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைபவர்நிலை. எல்லா நச்சுக் கிருமிகளையும் அழித்து பயிர் வளர்க்கும் கிருமிகள் கோசலத்தில் நிறைய உண்டு. இதுவரைகாலமும், பழைய காலத்திலும் நோயின்றி பயிர்களை வளர்த்தும் காத்தும் வந்திருக்கிறது கோசலம்.

## பழைய நிலை

கோசலமும், கோமயமும் எமது சொந்தமான பழைய மருந்தும்பசளையுமாகும். இதில் கோசலத்தை அதிகமாகப் புறக்கணித்து வந்ததும் நோய்கள் பரவுவதற்கு மூலகாரணமாகும். மாடுகட்டுதல், ஆட்டுப் பட்டியடைத்தல் ஆகியவைகளை அதிகமாக விட்டுவிட்டோம். இவைகளைச்செய்த நிலங்களில் நோய்வருவது குறைவு; வந்தாலும் இலகுவில் மாறிவிடுகின்றது. ஆராய்ந்து பார்த்தால் இந்த உண்மை நன்கு தெரியும.

## நிலந்திருத்த...

இதுவரை கூறியவற்றால் செயற்கை உரங்களைப் பாவிப்பதும், கோசலத்தைப் புறக்கணித்ததுமே நோய்கள் பரவுவதற்கு மூலகாரணம் என்பதை அறிந்தோம். பூமி ஓரளவு பசளைத்தன்மையை (சக்தியை) வைத்துக்கொண்டுதான் மிகுதியை பயிர்கட்கு கொடுக்கின்றது தேவையேற்படும்பொழுது இவைதொழிற்படும் இதுவே இயற்கை- செயற்கை உரங்களைப் பாவிப்பதால நிலத்திலுள்ள பசளைத் தன்மை முற்றும எடுக்கப்பட்டு விடுகின்றன. நிலம் வளமற்ற தாகிவிடுகின்றது. பயிர் வளர்க்கும் தன்மையும் நோயெதிர்க்கும் சக்தியுங் கொண்ட கோசலத்தை அதிகமாகப் புறக்கணித்துவிட்டோம். நோய்வராமல தடுக்க முடியுமா? எனவே நச்சுக்கிருமிகளையும் நோய்க்கிருமிகளையும் அழித்து பயிர்வளர்க்கும் கிருமிகளை வளர்க்க (1) மாடுகட்டுதல், ஆட்டுப்பட்டியடைத்தல் நல்லது. இப்படிச் செய்யும் பொழுது உடனுக்குடன் கொத்தியோ உழுதோ மண்ணுடன கலந்துவிடவேண்டும். அன்றேல் (2) கோசலத்தை எருவுடன் சேகரித்துவைத்திருந்து தேவையேற்படும் பொழுது நிலத்திலிட்டு உடன் உழுதுவிடவேண்டும். அன்றேல் (3) பயிர்களுக்கு நீரிறைக்கும் பொழுது கோசலத்தை நீருடன் கலந்து இறைத்தல் வேண்டும். இதனால் நிலத்தில் உள்ள நச்சுக் கிருமிகள், நோய்க்கிருமிகளை அழிப்பதோடு பயிர் வளர்க்குங்கிருமிகளை வளர்ப்பதுடன் பயிர்கள் இயற்கையாகவே நோயை எதிர்க்கும் சக்தியைப்பெற்று நீண்ட நாட்கள் இளமையுடன் நிற்கும். நல்ல விளைவையும் பெறமுடியும். நோய்கள் வந்தாலும் இலகுவில் தடுத்துவிடமுடியும். யூரியா, அமோனியம் சல்பைற்றால் பாதிக்கப்பட்ட நிலங்கட்கு சணல், பயறு போன்ற பயிர்களை விதைத்து பூக்கள் வந்தபின் பிடுங்கித் தாழ்ப்பது நல்லது. இவ்விதம் செயற்கை உரம் நச்சுக் கிருமிகளால் பாதிக்கப்பட்ட நிலங்களைத் திருத்த 1, 2 வருடங்கள் செல்லலாம். அதுவரையும் பயன்தருவது குறைவாக இருக்கலாம். மண் வளம்பெற்றுவிட்டால் இழந்த நஷ்டங்களையெல்லாம் மீண்டும் பெறலாம். மண்ணையும் பாதுகாத்துக்கொள்ளலாம்.

## பொது

எல்லாவகையான பயிர்கட்கும் கோசலத்தை கிருமி நாசினியா உபயோகிக்கலாம். இதன் சக்தி ஒரு கிழமைக்கு மேல் நின்று பிடிப்பதில்லை. அளவில் குறைத்து கிழமைக்கொருதரம் பாவிப்பது நல்லது. 3 நாட்களுக்குட்பட்ட கோசலம் இலைப்பயிர்கட்கு நல்லது. செடிவளர்வதற்கும் இலைகள் பருப்பதற்கும் உதவி செய்யும். மேலுக்குத் தெளிப்பதாகில் ஒரு நாட்சென்றபின் தெளிப்பதே நல்லது. நாட் செல்லச் செல்ல கிருமிகளைக் கொல்லுந்தன்மையுண்டு இத்

(9ம் பக்கம் பார்க்க)

## ஐ. நாவில் அத்துமீறிப் பிரவேசித்த தமிழர்

# இவர்தான் அந்த வைகுந்தவாசன்!





அன்று அக்டோபர் ஆறுந்திகதி. கடிகாரம் பன்னிரெண்டு ஐம்பது எனக்காட்டுகிறது. இலங்கை வானொலி செய்திகளை வாசிக்கின்றது. நம்பவே முடியவில்லை, ஐ. நா வில் ஓர் இலங்கைத்தமிழர் 'தமிழ் ஈழம்' பற்றிப் பேசமுனைந்து வெளியேற்றப்பட்டார். 'கிருஷ்ண' என்று தன்னை அறிமுகம் செய்துகொண்ட அவர். இலங்கைப் பிரதிநிதியான இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜனாப். ஏ. ஸி. எஸ். ஹமீட் பேசுவதற்கு அழைக்கப்பட்டசமயம் விருந்தினர்கள் வரிசையில் அமர்ந்திருந்து திடீரென மேடையில் ஏறி ஒரு சில நிமிடமே பேசினார்.

கிருஷ்ண வைகுந்தவாசன்!

பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பரபரப்பு; அரசியல் பிரமுகர்களிடையே சலசலப்பு; ஐ. நா. பிரதிநிதிகள் மத்தியில் முணுமுணுப்பு!

யார் இவர்?... என்ன பேசுகிறார்?... எப்படி அழையா விருந்தாளியாக நுழைந்தார்?... இப்படிச் செய்யும்படி தூண்டியவர் யார்?...

மேன்மை தங்கிய தலைவர் அவர்களே; சபைப் பிரதிநிதிகளே! விருந்தினர்களே!...

''இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே வாழுகின்ற சிறுபான்மை தமிழ் மக்களின் பிரதிநிதியாக இங்கு உரையாற்றுகிறேன். 25 லட்சம் தமிழ் மக்களின் தமிழ் ஈழத்தை மீட்பதற்காகவே இங்கு ஒரு சில வார்த்தைகள் கூறுகிறேன். இலங்கையில் வாழும் பெரும்பான்மையான சிங்கள மக்களின் அடக்குமுறையால் தமிழ் மக்கள் தமது பிரதேசத்தை மீட்பதற்கு உறுதி கொண்டுவிட்டார்கள்.

''உரிமை கேட்கின்ற சிறுபான்மைத் தமிழ் மக்களின் குரலை இந்தச்சபையில் ஒலிக்கச் செய்யாவிட்டால் நான் எங்குபோய் இதைச் சொல்லுவேன்.

இந்தியாவில் தமிழ்மக்கள் அதிக உரிமையுடன் வாழ்கிறார்கள் அதனால் காலப் போக்கில் தமிழ் ஈழத்தையும் இந்தியாவுடன் இணைக்கலாம்.''

ஒலிபெருக்கிகள் இயங்க மறுத்தன. பாதுகாப்பு அதிகாரிகள் கிருஷ்ணவை விசாரணை அறைக்கு அழைத்துச் செல்கிறார்கள்.

இதுவரை அமைதியாக இருந்த 750 வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மத்தியில், ''தமிழ் ஈழம்'' பற்றிய ஒரு சிந்தனை- அது பற்றி அறிய ஆவல்பிறக்கிறது.

இலங்கைப் பிரதிநிதி ஜனாப் ஹமீட் அடுத்து பேசத் தொடங்கினார். பேச்சுக்கான நேரத்தில் சில நிமிடங்களை எடுத்துக்கொண்டுவிட்ட வைகுந்தவாசனுக்கு நன்றி கூறுகின்றார்.

பாதுகாப்பு அதிகாரிகள், ''கிருஷ்ண'' வைப்பற்றி பல கோணங்களில் உரையாடுகின்றனர். வைகுந்தவாசனே நகைச்சுவைப்பிரியர், சாதாரணமாக தன்கதையையே வர்ணிக்கிறார்.

''இலங்கையில் பாரம்பரிய தமிழ்ப் பிரதேசமான அளவெட்டியைச் சேர்ந்த முன்னாள் மலாயன் பென்சனர் கிருஷ்ணபிள்ளை, இலெட்சுமிப்பிள்ளையின் மூத்த புதல்வன் தான் இந்த வைகுந்தவாஸன். ''ஏழுக்காரன் ஏழுலகம் செல்வான்'' என்று கூறுகிறது எண் ஜோதிடம்.

1920ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ந்திகதி பிறந்தவர் தான் இவர்.

தந்தையின் பெயர் கிருஷ்ண பிள்ளை என்பதால், அவரை ''கிருஷ்ண வைகுந்தவாசம்'' என்று நண்பர்கள் அழைக்கலானார்கள்.

ஆரம்பக்கல்வி எனது கிராமத்திலே ஆரம்பமானது காரைநகர் இந்துக்கல்லூரி, அளவெட்டி ஆங்கிலக்கல்லூரி, அருணோதயாக்கல்லூரி ஆகியவற்றில் இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்தார்.

யின் வழியையே பின்பற்றினார் வைகுந்தன்.

சின்ன வயதில் கல்வியுடன் அரசியல் ஞானமும் இணைந்து வளரத்தொடங்கியது. உயர் கல்விபெறும் நோக்கமாக 1938-ல் யாழ்ப்பாணக்கல்லூரியில் அனுமதிக்கப்பட்டார்.

லண்டன் மற்றிக்குலேசன் பரீட்சையில் விஞ்ஞானபாடங்களில் தோற்றி முதல்மாணாக்கனாகத் தேறினார். அப்போது தான் வடபகுதியின் கல்விமானான ஹண்டி பேரின்பநாயகத்தின் அறிமுகமும் எனக்கு

### ஐயா. சச்சிதானந்தம்

இளமைக்காலம் பசுமையானது, அதை நினைக்கின்றபோது அமரர்களாகிவிட்ட தாயும், தந்தையும் அவருக்கு மனக்கண்முன் தோன்றுவார்கள். அடிக்கடி ''படியடா... நீயொரு பெரியவனாக வருவாய்''என பெற்றோர் பேசிய காலங்களுமுண்டு.

தந்தை வாழ்நாள் பூராவும் ''வெஜிட்டேறியன்'' இந்து நாகரிகத்தின் உறைவிடம், தேசபக்தன். இந்திய சுதந்திர புருஷர்களான மகாத்மா காந்தி, மேதிலால் நேரு, பகவத்சிங் பற்றியே உரையாடுவார். சமயதத்துவங்களுடன் அகிம்சை பற்றியே பேசுவார். ஈழத்துத் தேச பிதாக்களான சேர். பொன். அருணாசலம், சேர். பொன். இராமநாதன் அரசியலைப் பின்பற்றினார். அரசியலில் தந்தை

கிடைத்தது. ஹண்டி மாஸ்டரும், தீவிரமாக, இளைஞர் காங்கிரஸில் உழைத்தநேரம். இவருக்கோ வயது 18.

சிறு பதவியைத் தேடிக் கொண்டார், இலங்கை அரசாங்க சேவையில் எழுதுவினைஞராக அமர்ந்தார். தொழிற் சங்கத்தில் பங்குகொண்டார்.

10 ஆண்டுகள் உருண்டோடின. இரண்டு ஆண்டுகள் அரசாங்க லிகிதர்சங்கத்தின் இணைச்செயலாளராகச் செயல் புரிந்தார்.

பதவியில்இருந்துகொண்டே தம்மைத் தொழிற்சங்கத்துக்கு அர்ப்பணித்தார். சங்கத்தின் குரலான சிவப்புநாடா (Red Tape) ஆங்கில சஞ்சிகையின் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

1950 ஆகஸ்டில் தொழிற் சங்க உரிமை-ஐ மீறிய குற்றத்திற்காக அரசாங்க பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

அது சோதனையான காலமாகத் தெரியவில்லை. தமது சொந்த முயற்சியால் 'மக்கள் குரல்' (People Voice) என்ற ஆங்கில இருவார இதழை ஆரம்பித்தார். பத்திரிகை கம்யூனிஸ தத்துவங்களை நன்கு பிரதிபலித்தது. பத்திரிகையின் நிர்வாகப் பொறுப்புக்கள் அனைத்தையும் தந்தையே ஏற்றுக்கொண்டார்.

பத்திரிகை நடாத்துவது சுலபமல்ல. ஆதரித்து வளர்த்த பெருமை தந்தைக்கேயுரியது. பத்திரிகைப்பொறுப்பை ஏற்று நடாத்திக்கொண்டிருக்கும் போது ''ஆனந்த வாழ்வு'' என்ற சமய நூலையும் அவர் வெளியிட்டார்.

1952-ல் ''ஆசியாவின் சமாதானம்'' என்ற மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாக செல்வதற்கு தெரிவுசெய்யப்பட்டார். இம்மகாநாடு பீக்கிங்கிலும்; உலக சமாதான மாநாடு சோவியத்திலும் நடைபெற்றன. இரண்டு மாநாடுகளிலும் இலங்கை மக்களின் கருத்தை நன்கு விளக்கினார். தமது மூன்று மாத சுற்றுப் பயணத்தைப்பற்றி ஆங்கிலத்தில் ''சீனவும் சோவியத் நாடும்'' என்ற தலைப்பில் சுவையான அனுபவங்களை எழுதியுள்ளார். நூலின் முகவுரையை உலக சமாதான சபை முன்னாள் தலைவர் பேராசிரியர் ஜே. டி. பெர்னல் எழுதினார்.

1960.ம் ஆண்டு சட்டத் துறையில் பிரவேசித்தார் திரு. வைகுந்தவாசன். 1962ல் சென்னை உயர்நீதிமன்றத்தின் வழக்குரைஞராக பணிபுரிந்தார்.

### செல்வாவுக்கு எதிராகப்போட்டி

1965-ல் காங்கேசன்துறை தொகுதியில், தந்தை செல்வாவை எதிர்த்து கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்தார்.

1971-ல் இலங்கையைவிட்டு வெளியேறி ஸாம்பியாவில மாவட்ட நீதிபதியாக நியமனம்பெற்றார். ஆறு ஆண்டுகள் இப்பதவியில் இருந்தார். இக்காலத்தில் நடைபெற்ற பொதுநலநாடுகளின் மாவட்ட நீதிபதிகளின் மாநாட்டில் ஸாம்பியா பிரதிநிதியாக நைரோபியிலும் கோலாலம்பூரிலும்கலந்துகொண்டார்.

### லண்டனில் பணி

இன்று லண்டன் மாநகரில் பிரபல சட்டவல்லுநராக கடமைபுரிகிறார் கடந்த மார்ச் மாதத்தில் லண்டன் விடுதலை இயக்கங்கள் சார்பில் தமிழ் ஈழக் கொள்கையை அச்சிட்டு வெளியிட்டார்.

ஐ. நாவில் இலங்கைப் பிரதிநிதியாக சென்று கர்ஜனை செய்த அமரர் ஜி ஜி பொன்னம்பலம் [illegible] பெற்றார் ஆனால் அழையா விருந்தாளியாக [illegible] சுடன் ஐ. நாவில் அத்துமீறி நுழைந்து உரையாற்றிய திரு. கிருஷ்ண வைகுந்தவாசனின் பெயரும் இன்று சரித்திரமாகிவிட்டது.

---

### சோதிடம் பலித்தது

''எனது மகன் ஒருநாள் நாட்டின் தலைவராக வருவான் என்று குடும்ப சோதிடர் கூறியிருந்தார் என்று இந்திய ஜனாதிபதி திரு. நீலன் சஞ்சிவ ரெட்டியின் தாயார் (96 வயது) அண்மையில் கூறினார்.

சோதிட பண்டிதரின் ஆருடத்தில் தாம் அதிக அக்கறை காட்டிக் கொள்ளவில்லையென்றும் ஆனால் இப்பொழுது அது நிறைவேறியிருப்பதாகவும் அந்த அம்மையார் கூறினார்.

மகனுக்கு ஏதாகிலும் அறிவுரை கூறவிரும்புகிறீர்களா என்று நிருபர் ஒருவர் கேட்டபோது; 'எனது மகனுக்குஎல்லாம் தெரியும். அவனுக்கு புத்தி சொல்ல வேண்டியதில்லை''என்றார். 'புதுடில்லிக்குப்போய் மகனுடன் இருக்க விருப்பமா'என்று கேட்டதற்கு, இல்லை, தெரியாத இடத்துக்குப் போக விரும்பவில்லை. கடைசிவரை இங்கேதான் இருப்பேன்' என்றார்.

ஆனந்த பூரியிலிருந்து 35 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள இல்லூர் என்ற கிராமத்தில் அவர் வசித்து வருகிறார்.

---

## உங்கள் கேள்விகளும் ஆவிகளின் பதிலும்

வெ. மரியதாஸ்,
முரசு மோட்டை,
பரந்தன்.

எனக்கு ஏதாவது அரசு உத்தியோகம் கிடைக்குமா? எப்போது?

இவ்வருடமே உத்தியோகம் கிடைக்கும். அரச உத்தியோகம் அல்ல.

கேள்வி...?

பதில்... அவருக்கு அடுத்த ஆண்டுதான் திருமணம்.

எனது சகோதரியின் வெளிநாட்டுப் பயணம் சித்தியாகுமா? எப்போது?
ஓராண்டுக்குள் சித்தியாகும்.

செல்வி தேவி
அராலி மேற்கு, வட்டுக்கோட்டை:

நான் 1978ல் க. பொ. த. உயர்தரப் பரீட்சை எடுத்துள்ளேன் சித்திஉண்டா?

உண்டு.

நான் பல்கலைக்கழகம் புகுந்து மருத்துவம் படிப்பேனா?

பல்கலைக்கழகம் புகும் ஆசை மட்டும் நிறைவேறும்.

என் எதிர்காலம் எப்படியானது?

நன்றாக இருக்கும்.

படிப்பிற்காக வெளிநாடு செல்வேனா?

இல்லை.

திரு......
(பெயர் குறிப்டாதவாசகர்)
வியாபாரி மூலை, பருத்தித்துறை.

வேலைக்கு இன்னும் 6 மாதம் பொறுங்கள். தனியார்துறையில் கிட்டும்.

எனக்கு வாகனப் பொருத்தம் உண்டா? உண்டு.

எனது எதிர்கால பொருளாதாரநிலை எப்படியிருக்கும்? உயர்ந்த நிலையா?

சாதாரணநிலை.

வெளிநாட்டுப்பயணம் உண்டா? இல்லை.

எனது எதிர்கால இலட்சியம் நிறைவேறுமா?

ஓரளவு நிறைவேறும்.

திரு.......?
(பெயர்குறிப்பிட விரும்பாத வாசகர்) வியாபாரிமூலை, பருத்தித்துறை.

நான் கல்வியில் முன்னேறுவேனா? முன்னேற்றம் உண்டு.

எனக்கு ஏதாவது தொழில் கிட்டுமா?

எழுத்துத் தொழில் கிட்டும்.

வருங்காலம் நன்றாக இருக்குமா? ஏன் இச்சந்தேகம்?

வெளிநாட்டுப் பயணம் உண்டா? இல்லை.

கேட்டு எழுதுபவர்:
**வி. ரவிச்சந்திரன்**

திருமதி......?
(பெயர் குறிப்பிட விரும்பாத வாசகி) வியாபாரிமூலை, பருத்தித்துறை)

எமக்கு எந்த வருடத்தில் முதற் குழந்தை பிறக்கும்? முதற்குழந்தை ஆணா? பெண்ணா? மொத்தம் எமக்கு எத்தனை குழந்தைகள்? அவற்றில் ஆண் எத்தனை? பெண் எத்தனை?

மூன்று வருடத்தில் ஆண் குழந்தை பிறக்கும். மொத்தம் மூன்று குழந்தைகள். ஆண் இரண்டு. பெண் ஒன்று.

கணவருக்கு தொழிலில் உயர்வு உண்டா? எப்போது?

உயர்வுஉண்டு. ஆனால் விரைவில் இல்லை.

எனக்கு எதிர்காலத்தில் தோட்டம், வயல் என்பன சொந்தமாக கிடைக்குமா?

கிடைக்கும்.

வெளிநாடு செல்வேனா?

இல்லை.

நம் வருங்காலம் எப்படி? பொருளாதார நிலை எப்படி?

இரண்டும் சுமார் தான்.

வாகனப் பொருத்தம் உண்டா? இல்லை.

செல்வி......?
(பெயர் குறிப்பிட விரும்பாத வாசகி) வியாபாரிமூலை, பருத்தித்துறை.

நடைபெற்று முடிந்த வருடப்பரீட்சையில் சித்தி அடைவேனா? சித்தி உண்டு.

எனக்கு அரசாங்க உத்தியோகம் கிடைக்குமா? எப்போது?

இரண்டு வருடம் கழித்துத் தான் கிடைக்கும்.

என் மனதிலுள்ள எண்ணம் நிறைவேறுமா?

நிறைவேறும்.

பொருளாதாரம் எதிர்காலம் எப்படி இருக்கும்?

சுமார்.

வெளிநாடு செல்வேனா?

கிடையாது.

செல்வி......?

(பெயர் குறிப்பிடவிரும்பாத வாசகி) தாழையடி ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு.

கேள்வி:......?

பதில்: உங்களுக்கு அடுத்த ஆண்டு வேலை கிடைக்கும், நல்லகாலமும் அப்போதே தொடங்குகிறது. எதிர்காலம் இதைவிட நன்றாக இருக்கும் சகோதரிக்கு இரண்டு வருடத்தில் மணமாகும்.

# ஐயந்தி

அ. செ. மு.

அநுரதபுரி மணிமகுடத்தைத் தவிடுபொடியாக்கி நகரைப் பாழாக்கி மத்திய ஈழத்து இராசரட்டையை வென்று வெற்றிவாகைசூடிய சோழப் பேரரசு, அதன்பின், இராசதானியைப் ''புலஸ்தி நகரம்'' என அந்நாளில் அழைக்கப்பெற்ற பொலநறுவைக்கு மாற்றி, இராஜராஜனின் மற்றொரு பட்டப்பெயராகவிருந்த 'ஜனநாதமங்கலம்' என்ற பெயரையே இராசதானிக்கும் சூட்டிற்று. கடல் கடந்த படை எழுச்சியின் வெற்றிப் பேறுக எழுந்த ஈழத்து மணிமகுடத்துக்கு ''மும்முடிச்சோழ மண்டலம்'' எனப் பெயரிடப்பட்டு அது சோழப் பேராசின் ஒரு மாகாணமாக இணைக்கப் பெற்றது. இராசரட்டையின் பல பகுதிகளில் அங்கங்கு சிவாலயங்களைப் பதிதாக நிறுவி அக்கோவில்களின் கும்பாபிஷேகத்தையும் அரசின் மணிமகுட விழாவினையும் ஒரே நாளில் மகோற்சவ விமரிசையுடனே கொண்டாட நாள் குறித்தாகி அதற்கான ஏற்பாடுகளும் துரிதமாக நடைபெற்றன. சமுத்திரம் கொந்தளிக்கும்படியாக கப்பல்களும், மரக்கலங்களும் இரு கரைக்கும் மத்தியில், சமுத்திர நீரைக் கிழித்துக் கொண்டுசென்றன. எங்கும் ஒரே மகிழ்ச்சிப் பெருக்கு, அலைகளுடனே ஜே ஜே எனப் போட்டியிட்டெழும் ஆரவாரம் புதியதொரு எழுச்சியின் கலகலப்பு... அரசபீடத்தின் ஆணை ஏற்று சோழநாட்டு சிற்பிகள் சிவாலய பிரதிஷ்டைக்கான சுவாமி விக்கிரகங்களை உருவாக்குவதில் கண்ணுங்கருத்துமாய் ஈடுபட்டிருந்தார்கள். குறுநாள் தவணை ஆதலின் அவர்தம் வேலைகள் அசுரவேகமாக நடைபெற்றன.

பார்வதி சிவனின் சக்திவடிவம், சிவசக்திவடிவத்துக்கு சிலைசமைத்த சிற்பி ஒருவனைப் பற்றிய கதைதான் இங்கு நான் சொல்லப்போவது.

மன்னனின் ஆணை ஏற்று சிற்பி தொட்ட சிலையின் வெண்கலவார்ப்பு நேர்த்தியாய் அமைந்துவிட்டது. அத்தெய்வச்சிலைக்கு ஒரு சுப நாளில் இனி கண்கள் திறக்க வேண்டும். அதுவும் பூர்த்தியாகிவிட்டால் அது பேசும் பொற்சிலையாக ஒளிரும். ஆனால் அந்தக் கண்கள் எத்தன்மைத்தாய், எவ்வியல் புடைத்தாய் என்ன பாவ மெய்ப்பாட்டுடனே அமைதற்குரியன என்பதைச் சரியாக நிதானித்து நிர்ணயிக்க மாட்டாமல் சிற்பியின் மனம் அலைமோதியது. அதே சிந்தனையாய் அதே விசாரமாய் பல இரவுகள் ஓடி மறைந்தன. இந்நாள் மட்டில் வாழ்வின் பல நிலைகளில் நயன காவியமாக அவன் அவதானித்து அகத்திரையில் நினைவோவியமாகப் பதிந்திருந்த பலவித நோக்குகளை, திருஷ்டிகளை, பார்வைகளை, காதளவோடி உருண்டு புரளும் கயல்விழி, வேல்விழி, மருளும் மான்விழி அனைத்தையும் எடைபோட்டு உரைகல்லில் உரைத்துப் பார்ப்பதுபோல், உரைத்துப் பரிசிலித்தான். ஊ...ஹூம் அவையாதொன்றும் தெய்வச்சிலையின் முகவதனத்தில் பொறிக்க உகந்ததாக அமையவில்லை.

சிலைக்கு கண் பொறிப்பதற்கான சுபநாளும் குறித்தாயிற்று. சிற்பியோ இன்னமும் ஒரு முடிவுக்கும் துணியாத சபல சித்தத்தில் ஆழ்ந்திருந்தான். அந்த அமைதியின்மையால் உறக்கமும் ஊணும் கெட்டு அவன் உடல் நலம் குன்ற, அந்நிலை குறித்து அவன் மனையாள் மனமிரங்கி ஒரு தினம் அவனை அணுகினாள். அவன் மனநிலை உசாவினாள். அதற்கு அவனோ ''உன்னிடம் சொல்லி ஆவதென்ன?'' என்று கூறி சலித்துக் கொண்டான். அவள் பின்னும் தொடர்ந்து வற்புறுத்தி ''நீங்க உள்ளது விளம்பிடின் நானும் செயலற்று உட்கார்ந்திடுவேன். சக்தி ஒடுங்கினால் அப்புறம் நிலைமை இன்னும் மோசமாகிவிடும்'' என்று மிரட்டிய தன் பேரில் சிற்பியின் மனப் புதையல் மெல்ல வெளிப்பட்டது.

''சக்தி அம்மன் சிலைக்குக் கண்கள் பொறிக்க சுபநாள் குறித்தாயிற்றல்லவா? அது குறித்துத்தான் இராப்பகல் யோசனை!'' என்றான்.

''அட! சிலை முழுக்கவும் சமைத்து விட்டீர்கள் இனி, அதற்குக் கண்கள் திறப்பதற்குத்தானா இப்படி இராப்பகல் யோசனையில் ஆழ்ந்து போனீர்கள்!''

''மண்டுகமே! அடியார் கைதொழ, வானோர் புகழ தெய்வச் சிலைக்கு ஜீவன் துடிப்பது அதன் கண்களிலே தான் வற்றாத ஜீவநதியாக என்றென்றும் அருள் பொழியும் கண்கள், அந்தக் கண்களைத்தான் தேடிக் கொண்டிருக்கின்றேன்! சோழப் பேரரசின் ஈழப்படை எழுச்சியில் வெற்றிவாகை சூடி நிற்கும் எங்கள் மன்னர் பிரான் அங்கு அரசு மணிமகுடம்சூடும் தினத்தன்று ஈழத்தின் பல திக்குகளிலும் நூறு கோவில்களை நவமாக நிர்மாணித்து சிலை நாட்டி அவற்றின் கும்பாபிஷேகத்தையும் அன்றைய தினமே பெரும் விழா மகோற்சவமாகக் கொண்டாடுவதற்குத் தீர்மானித்திருக்கிறார். ஈழத்தின் புதிய இராசதானியின் மணிக்கொடி பறந்துகொண்டிருக்கும் மகிமை மகத்துவம் அமைந்ததொரு இடத்தில் என் கைவண்ணத்தில் உருவான சிலையை நாட்டி அதற்குக் சோவில் எழுப்பப் போகிறார்கள்!''

''அல்ல, முதலிலே கோவிலைக் கட்டி எழுப்பி விட்டு அதுக்கப்புறம் தான் அங்கு சுவாமி சிலையை வைப்பார்கள்-''

''வைத்து நாளாந்தம் அதன்முன் தலைதாழ்த்தி கைதொழுது நிற்பார்கள்-''.

இந்தமாதிரி ஆயிரம் எண்ணப் பெருமிதம் ஆட்டி வைத்த தோஷமாகத்தான் கண்களில் உறக்கம் கெட்டுது நோயும் பிணியும் தொட்டுது. சக்தி அம்மன் சிலைக்கண்களில் மெய்ப்பாடு காணும் தியானம் சிந்திக்கவேணுமானால் மனச் சிந்தனை களங்கமற்ற தூய்மையுடன் ஒளிர வேண்டும். நூறாயிரம் கனவுகள் காணக்கூடாது-''

''ஆமா! இதுக்குமேலே இன்னும் என்னென்ன சொல்லப்போகிறே?''

''சொல்லப்போனால், கணவனும் மனைவியும்கூட சிவமும் சக்தியும்தான். சக்தியினால்தான் சிவம் இயங்குகின்றது, சிவமின்றேல் சக்தியில்லை. சக்தியின்றேல் சிவமில்லை-''

''ஆமாடி அதுக்கும் இதுக்கும் என்ன தொடர்புகற்பிக்கிறே?''


''ஏன், உங்க கைவண்ணத்திலே எழுந்திருப்பது சிவசக்தி வடிவம் அல்லவா? முதன் முதலாக நீங்க என்கழுத்திலே மணமாலை சூட்டி என்னைக் கைப்பற்றியபோது பிறந்தகத்தையும் உறவினரையும் பிரிந்து உங்கபின்னால் வந்தேனே அன்று அது சமயம் என் கண்கள் உங்களை என்னவித நோக்குடனே இறைஞ்சி நின்றன! அதனைச் சிறிதே மனத்தில் மீள நினைத்துப் பாருங்களேன்!''

'அதாவது, புதுவாழ்வில் கால்வைக்கும் புதுப் பெண்ணின் கண்ணோக்கு பற்றிச் சொல்கிறாய். ஆமாம், அவளிடத்தே எவ்வளவோ தன் நம்பிக்கை, திடசித்தம். எந்த ஒரு ஆடவனும் அவன் வாழ்நாளில் எந்தவொரு சமயத்திலும் காண்பிக்காத துணிச்சல், குடி கொண்டிருக்கும். அல்லாது போனால் முன்பின் கண்டு கேட்டு பழகி அறியாத ஒருவன் பின்னால் அவன் வாழ்வுக்குதோள் கொடுக்கும் அந்தத்திரம் அவளிடத்தே எப்படி வந்தது? அப்போ, அதுதான் சக்தியா? சிவத்துக்கு சமபலத் துணைவலி தோள்வலியாக நிற்கும் அதனைத்தான் சக்தி அவதாரம் என்று சொல்கிறோமா? ஆமடி ஆச்சி நீ சொல்கிறதிலே விஷயம் உண்டு. அது, இப்போ புலப்படுகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

ஹொண்டா

உலகில் முதல் நம்பர்!



உலகில் உற்பத்தி செய்யப்படும் மோட்டார் சைக்கிள்களில் பெரும்பாலும் மூன்றில் ஒன்று ஹொண்டா ஆகும். பல்லாண்டு காலமாக உலகின் அதிபெரிய மோட்டார் சைக்கிள் உற்பத்தி நிறுவனமாகத் திகழ்ந்து வருவதும் ஹொண்டா தான். 1977-ம் ஆண்டில் ஹொண்டா 23 இலட்சத்து 75 ஆயிரம் மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்து ஒரு புதிய சாதனையை நிலைநாட்டியது. நீடித்த உழைப்பிற்கும் நம்பகத் தன்மைக்கும் ஈடிணையற்ற சிக்கனத்திற்கும் பிரபல்யமான 4 ஸ்ட்ரோக் இயந்திரங்களில் காணப்படும் ஹொண்டா தொழில்நுட்பச் சிறப்பின் காரணமாகவே ஆண்டு தோறும் ஹொண்டா இவ்விதம் முன்னணி இடம் வகிக்கிறது.

சிறந்ததையே வாங்குவோரின் கூட்டத்துடன் நீங்களும் சேருங்கள்!

ஸ்டபோர்ட் மோட்டார்கம்பனி லிமிட்டெட்,
''ஹொண்டா ஹவுஸ்''
718/7, மருதானை ரோட், கொழும்பு 10.

தொலைபேசி: 94362

# கலைமஞ்சரி

## கவிஞர் கண்ணதாசனுடன் ★ ஒரு சந்திப்பு ★

ஆஸ்தான கவிஞர் கண்ணதாசனை சந்திக்க நான் அவரது இல்லம் சென்ற போது, நேரம்—

அந்தி மாலை மறைந்து... இளப இரவு வந்து கொண்டிருந்தது.

முன்னேற்பாட்டுடன் நான் அங்கு சென்றிருந்ததால், கவிஞரைச் சந்திப்பதில் சிரமம் எதுவும் ஏற்படவில்லை.

கண்ணதாசன்- தமிழ் நாட்டின் அரசு கவிஞர் அல்லவா?

ஒருபுறத்தில்; தமது இரண்டாவது மகனின் திருமண அழைப்பிதழ் அனுப்பும் 'முகவரி வேட்டை'யில் மூழ்கியிருக்க; அந்த நெருக்கடி நேரத்தையும் பார்க்காமல் கவிஞர் எனக்குச் சற்றுநேரம் ஒதுக்கித்தந்தார்.

இரவு சுமார் ஏழு மணியிருக்கும்.

'பெல்'சத்தம்கேட்கிறது.என்னைவரும்படி கவிஞர் அழைக்கிறார். நான் அவரது அறையை நோக்கிச் செல்கின்றேன்.

'நான் இப்பொழுது சந்திக்கப் போவது ஒரு பிரபல கவிஞரை அல்ல, ஆஸ்தான கவிஞர் ஒருவரைச் சந்திக்கிறேன்' என்ற நினைப்பில் கவிஞரின் அறைக்குள் நுழைகின்றேன். கவிஞர், ஒருகட்டிலில் ஆற அமர சாய்ந்திருக்கிறார்.

அவரைக் கண்டதும் உடன், அரசர்களின் நினைவு தான் ஞாபகத்துக்கு வருகிறது.

அரசர்களை நேரில் சந்திக்காவிட்டாலும்; கதைகளில், திரைகளில் பார்த்திருக்கிறோமல்லவா? அதே 'காட்சி' தான். உடைதான் வித்தியாசம்.

நீட்டி நிமிர்ந்து கட்டிலில் ஒய்யாரமாக- ஒரு பக்கம் சாய்ந்தவாறு கவிஞர் 'இருந்தது-' ஒரு தனி அழகாகவே தெரிந்தது.

சில நிமிடங்கள்— அறிமுகம், இனிய வரவேற்பு, சுகதுக்க- நாட்டுநல விசாரிப்பு. பின்னர், கவிஞர் மனந்திறந்து பேசத்தொடங்குகின்றார்.

கேள்வி எதையும் நான் கவிஞரிடம் மறைக்க விரும்பவில்லை. அவரும், எனது கேள்விகளுக்குப் பதிலளிக்கத் தயங்கவில்லை.

எனது கேள்விகளில் 'பச்சை' மட்டும் இருக்கவில்லை; 'சிவப்பும்' கூடவே ஒளி வீசிற்று. கவிஞர் கண்ணதாசன் எனது அத்தனை கேள்விகளுக்குமே சுருக்கமாக—நிதானமாக பதிலளித்தார்.

●

"உங்கள் ஆரம்ப -கவி- வாழ்க்கை எப்படித் தொடங்கியது? இதற்கு யார் காரணம்?''— நான் பேட்டியை ஆரம்பித்தேன்.

''என்னைப் பொறுத்தவரை எவரும் எனக்கு குறிப்பிடக் கூடியமாதிரி ஒரு உந்து சக்தியாக இருந்ததாகக் கூற முடியாது. எனக்குள் எழுந்த ஆர்வம்— தனிவேகம்தான், இன்றைய வளர்ச்சிக்கு ஒரு காரணம் என்ருல்; என்னை பாலூட்டி, தாலாட்டி தோளேற்றி, நடமாடவைத்து எனது 'அழகை' இரசித்தவர்கள்—சுவைத்தவர்கள் தமிழ் அன்னைதாம்— தமிழ் மக்கள் தான் முழுக்காரணம் என்று கூறலாம். குறிப்பாக 17 வயதில் நான் எழுதிய— பாடிய கவிதைகள் வரவேற்புப் பெற்றுவிட்டன'' என்ருர் கவிஞர்.

''உங்களுக்குப் பிடித்தமான நாவலாசிரியர் யார்?''

''கல்கி'யைப் பிடிக்கும்''— சட்டென்று பதில் கூறிய கவிஞர்; ''இன்று வாழும் எழுத்தாளர்களில் சாண்டில்யன் உள்ளிட்டு சிலரை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது'' என்ருர்.

### மகான்

''இப்பொழுது உங்கள் எழுத்தில் ஒரு திடீர் வேகம் காணப்படுகிறதே... என்ன காரணம்?'' என்று நான் கேட்டபோது கவிஞர் சற்றுப் புரிந்து கொள்ளாதவர் போல, ''திடீர் வேகம் என்று எதனைக் குறிப்பிடுகின்றீர்கள்?'' என்று கேட்டார்.

''கடந்த சில மாதகாலமாக நீங்கள் நிறைய எழுதிக் கொண்டிருக்கின்றீர்கள். உங்களின் படைப்புகள், வாரம் என்றில்லாமல் நாட்கணக்கில் 'ஆக்கிரமித்து' வாசகர்களைத் திக்கு முக்காடவைத்து பெருவிருந்தாக அமைந்து கொண்டிருக்கிறது. இந்த எழுத்து வேகத்துக்கு என்ன காரணம்?''—என்று நான் திருப்பிக்கேட்டேன்.

''எழுத வேண்டும் என்ற ஆவல் இப்பொழுதுதான் ஏற்பட்டதல்ல. அது; நேரத்தையும் காலத்தையும் மிஞ்சியது. ஆனல் நேரம் இப்பொழுது எனக்கு நிறையக் கிடைப்பதால் அதனை நிறையப்பயன் படுத்துகின்றேன். அவ்வளவு தான். வேறு ஒன்றுமில்லை'' என்ருர் கவிஞர்.

''எழுதுவதற்கென்று ஒரு குறிப்பிட்ட நேரத்தை நீங்கள் ஒதுக்குகின்றீர்களா?''

''மனதில் அமைதி இருக்க வேண்டும். சூழ்நிலையும் இதற்குச் சாதகமாக வேண்டும். நான் கூறுவதை எனது உதவியாளரும் அப்படியே எடுத்து 'வார்த்து' விடுவதும் உண்டு. இதை விட்டு ஒரு காலம், நேரம் என்று அதிகமாக நான் குறித்துக் கொள்வதில்லை. மாலை நேரம்— இரவு நேரம், அமைதியானது. அமைதியான சூழலில் அதிகம் எழுத முடிகிறது''

''உங்களிடம் நான் எதனையும் மறைக்க விரும்பவில்லை. தனிப்பட்டரீதியிலும் நான் கேள்விகள் கேட்கலாமல்லவா?''—இது நான்.

''வானம் நிர்வாணமானது. ஏன் உலகமே ஒரு நிர்வாணம் தான் ... நிறையக்கேளுங்கள்'' கவிஞர் கண்ணதாசன் சிரிக்கின்ருர்.

அரசியலில் நீங்கள் இப்பொழுது எந்தப் பக்கம்?''— நான்கேட்டேன்.

''அரசியலை விட்டு நான் ஒதுக்கியிருக்கின்றேன். நான் இப்பொழுது அரசியலில் இல்லை...'' கவிஞர் சுடச் சுடக் கூறினர்.

''நீங்கள்இப்படிக் கூறலாம். ஆஸ்தான கவிஞர் ஒருவர் இவ்விதமாகத்தான் இருப்பார் என்று மக்கள் நினைக்கவும் கூடும். ஆனல் உங்களை அவதானித்துவரும் மக்கள், வேறு விதமாக அல்லவா அர்த்தம் கூறுகிருர்கள்...''

''என்ன சொல்கிருர்கள்?'' கவிஞர் கேட்டார். நான் சொன்னேன்—

[9-ம் பக்கம் பார்க்க]

## ஈழத்து சினிமா... கண்டதும் கேட்டதும்!

★ நம் நாட்டுத் தமிழ் திரைப்படங்கள் என்று கூறும் பொழுது, நம்மை அறியாமலேயே ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது. இயற்கைதானே? ஆனல் நம்மவர்கள் சில வேளைகளில் கையாளும் 'தாரகமந்திரம், இருக்கிறதே... 'இமயமலை' சாதனைதான்! ஆனல் இந்தக் குத்துக்கரணத்திலும் 'மீசையில்' மண்படுகிறதென்ருல்...? கடந்த வாரம் கணபதி பெயரில் 'குங்கும'மாக மீண்டும் வெளிவந்த ஈழத்துப் படத்தைப் பற்றி பத்திரிகைகளில் என்ன எல்லாமோ வந்திருந்தன. ஈழத்துப்படம் இது என்பதை பூதக்கண்ணுடி கொண்டுதான் நிருபிக்க வேண்டியிருந்தது; அந்தளவுக்கு 'விளம்பரம்' பிரமாதம்! கடந்த வாரம் ஒரு நாள் இப்படத்தின் இரண்டாவது காட்சியைப் பார்க்கப் போயிருந்தேன். என்ன அதிசயம்! 2-ம் காட்சிப் படம் ஓடவில்லை! என்ன காரணம் தெரியுமா? தியேட்டருக்குள் வந்து—போனவர்கள் ஐவர் மட்டும்தான்!

● படத்தயாரிப்பாளர்கள் எப்படி இருக்கவேண்டும்? அவர்கள் எப்படி வேண்டுமானுலும் இருக்ககலாம். அது தான்பட'மரபு' ஆனல் இந்த 'மரபு' வழியைமீறுபவர்களும் படவுலகில், அதுவும் தமிழ்ப் படஉலகில், அதிலும் ஈழததில் இருக்கிருர்கள் என்ருல...? நீங்கள் அமர்ந்திருக்கும் கதிரையைச் சற்று முன்பாகவே இழுத்துப்போட்டு இதனைப் படியுங்கள்! இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கும் நகைச் சுவைப்படத்தின் தயாரிப்பாளரை எப்படியாவது ஒரு தடவை, படப்பிடிப்புக்கு அழைக்க அந்த முக்கிய நடிகர் பகீரதப்பிரயத்தனம் மேற்கொண்டார். முடியவில்லை. ஒரு தடவை— ''இன்று றிக்கார்டிங்...'' என்று கூட அழைத்தார். தயாரிப்பாளர் அசையவில்லை 'படம் முழுமை பெறுகிறது. இந்தக் கடைசிக் காட்சியையாவது வந்து பாருங்கள்...'' என்று விடாப்பிடியாக அரித்துப்பார்த்தார்கள்! தயாரிப்பாளர் இயமி கூட அசையவில்லை. ''நான தயாரிப்பாளர் எவ்வளவு பணம் வேணுமோ கேளுங்கள். படக்காட்சி... றிக்கார்டிங்...என்று என்னை அழைக்காதீர்கள். படம் நல்லபடியாக முடிய முழுமுயற்சி எடுங்கள். பணப்பிரச்னை ஏற்படாமல் நான் பார்த்துக் கொள்கின்றேன். பணம் எவ்வளவு தேவையோ அதைக் கேளுங்கள். அத்தோடு நான் சரி. படம் நல்லபடி எடுப்பது உங்கள் கடமை...'' என்று சிரித்துக் கொண்டே மீண்டும் கூறினராம் அந்தப் படத்தயாரிப்பாளர். இது, 'திரைப்பட இயற்கை'க்கு ஒரு மாற்றம்தானே?

● ஈழத்து, சிங்களத்திரைக் கதாநாயகன் காமினீ, தமிழ் நாட்டில் சில தமிழ்ப் படங்களில் நடித்துவிட்டு தாயகம் திரும்பிட்டார். அதுசரி, இவர் ஈழத்தில் நடித்து தயாரித்த ''காற்ருடி'' தமிழ்—சிங்களப் படத்துக்கு என்ன நடந்தது? தணிக்கைக்குப் போய்த்தான் மாதங்கள் பல ஆகிவிட்டனவே!

● ஈழத்து தமிழ்ப்படத்தின ஒரு இளம் கதாநாயகனுக சிவராம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளார். பாராட்ட வேண்டியது. ஒரு இளம் கதாநாயகி கிடைக்கமாட்டாரா?

—அவதானி

## ★ இராமேஸ்வரம் முதல் புதுடில்லிவரை சில இடங்கள் பல கதைகள்....

கே. ஜி. எம்.

இராமேஸ்வரம் சுங்கப் பகுதிக்கு முன்பாக—வாசல் கதவு திறக்கப்படுவதை எதிர் பார்த்து—'கியூ'வில் கால் கடுக்க நின்றபோது, அடுத்த பயங்கரம் நிகழ்ந்ததாகக் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? அந்த இடத்துக்கு இன்று வருவோம்.

அதிகாலை சுமார் ஐந்து மணிமுதல் காலை சுமார் ஒன்பது மணிவரை காத்திருந்த எனக்கு — என்னைப் போன்றவர்களுக்கு — அடுத்த கட்டம், சுங்கப்பகுதி'எல்லை'க் கதவு திறக்கப்படமாட்டார்தா என்பதுதான்!

சுங்கப்பகுதிக்குள் நுழைவதற்கு முன்னர், சுங்கப் பகுதிக் கட்டடம் அமைந்திருக்கும் வளவுக்குள் நுழைந்தாகவேண்டும்.

அங்கே ஒரு பெரிய வாசற் கதவும், அதனை ஒட்டியதாக சிறிய வாசல் கதவுமுண்டு, பெரிய கதவு திறக்கப்பட்டால், சுங்கப்பகுதிச் சோதனைக்காக உள்ளே எல்லோரும் வசதியாக நுழைய வாய்ப்பிருக்கும். ஆனல் இந்த வாசலால் சுங்கப்பகுதி எல்லைக்குள் நுழைந்துவிட்டால், சுங்கச் சோதனையை அடைந்து விடலாம் என்று தப்புக் கணக்குப் போட்டுவிடக் கூடாது. வாசலால் நுழைந்து ஒரு பெருமூச்சுவிட்டு, உள்ளே சென்றுவிட்டால் அடுத்த 'கியூ'வில் நின்ருகவேண்டும்!

ஒன்பது மணியளவில் வாசற் கதவு திறக்கப்படுகிறது. வாசற்கதவு என்ருல் கதவுகள் அல்ல. அதனை ஒட்டியிருக்கும் சிறிய-சுமார் மூன்று அடி அகலமுள்ள-கதவு படார் எனத் திறக்கப்படுகிறது.

'அவ்வளவுதான். அந்தப் பயங்க'ரத்தை என்னவென்று சொல்வது?

ஒரே 'கியூ' பல 'கியூ'க்களாக-'கியூ'க்கள் அல்ல-பல 'கும்பல்களாக' உடை'பட்டு, அலைமோதுகிறது!

'கீயா மாயா'ச் சத்தங்கள், அணுகல்கள், அலறல்கள்... ஏன்; உயிர்த்துடிப்புகள் என்று கூடச் சொல்லலாம்.

நசிபட்டு, நெரிபட்டு...அப்பப்பா...அந்தச் க்ஷணத்தில் நடைபெறும், 'உள்நுழைவு பயங்கரம்' இருக்கிறதே... வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. ஆண்களே ஒரு மூச்சு விடும்பொழுது; பெண்களும் வயோதிபர்களும்,குழந்தைகளும் எம்மாத்திரம்...!

'சுங்கப் பகுதி எல்லைக்குள் எப்படியும் முன்னதாக நுழைந்து 'கியூ'வில் 'அட்வான்ஸா'கவே இடம்பிடித்து, கப்பலுக்குள் நுழையக்கூடிய அந்த எண்ணூறு பிரயாணிகளில் நாமும் ஒருவராக இருந்துவிடவேண்டும்'- என்ற துடிப்பில் எழும் ஆர்வத்தினுல், எப்படியோ அந்தச் சின்ன வாசலால் நுழைந்து உள்ளே இருக்கும் அடுத்த 'கியூ'வில் இடம் தேடிக்கொள்கிருர்கள். இதன் பின்னர்தான் —முன்னதாக நிற்பவர்களையும்,பின்புறமாக வந்துகுவிந்தும் கொண்டிருப்பவர்களை பார்த்து—ஒரு நீண்ட ஆறுதல் பெருமூச்சு வெளிக்கிளம்புகிறது.

'கப்பலில் எப்படியும் போய் விடலாம்.'

வெளியேசுமார் நான்குமணி நேரம் வரை சுட்டெரித்துக் கொண்டிருக்கும் வெயிலில் காத்திருந்துவிட்டு அந்தச் சின்ன வழியால் சனங்கள் உள்ளே நுழையும் நேரம்— அலைமோதும் நேரம்—பல சங்கதிகள் நடந்துவிடுகின்றன!

முன்னே றிவிடவேண்டுமென்ற எண்ணத்தில், நெருக்குப்பட்டு வாசலால் நுழைந்து அடுத்த 'கியூ'வுக்கு வரும் போது...

பலருடைய பேனுக்கள் கீழே விழுந்துவிடுகின்றன. இதுமட்டுமல்ல, மணிப்பேர்ஸுகள் மற்றும் சில்லறைப் பொருள்களுடன், முக்கிய தஸ்தாவேஜான பாஸ்போர்ட்டுகளையும்கூடகை தவறி கீழே (சுங்கப்பகுதி வளவுக்கு வெளியே) போட்டுவிட்டு உள்ளே வந்துவிடுகின்றனர். பல நிமிடநேரம் கழித்து 'இவைபற்றி நினைவுவரவே— தடுமாறிப்போய் விடுகின்றனர்!

நான் வந்த நேரத்தில் பலருக்கு இவ்விதம் 'அனுபவம்' ஏற்பட்டதைக் கண்ணுல் கண்டேன் அவர்கள் துடித்துப் பதறுவதைக்கண்டு வேதனைப்பட்டேன். சிலருக்கு தவறிய பொருள்கள் மீண்டும் கிடைத்தன. சிலருக்கு அதோ கதிதான். இவ்விதமாக 'பாஸ் போர்ட்'டுகளே தொலைந்து விட்டதென்ருல்...;

இந்த நிலை ஏன் வரவேண்டும்?

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு கப்பலில் சென்று— திரும்பும் பிரயாணிகளுக்கு ஏன் 'ஆடு மாடுகள்' அனுபவம் ஏற்படவேண்டும்? சுயகௌரவத்துக்கும், மனிதாபிமானத்துக்கும் 'இழுக்கு' ஏற்பட்டுத் தான் கப்பலில் இந்தியா போய்வரவேண்டுமா?

உரியமுறையில் கடவுச்சீட்டுப் பெற்று, அந்நியச் செலாவணியும் பெற்று மகிழ்ச்சியுடன் ஒருதடவை, இந்தியாவை-புண்ணிய பாரதத்தை— பார்க்கவேண்டுமென்று செல்லும் இலங்கையர்களுக்கு, ஏன் தான் இத்தனை சோதனைகள்?

இதற்கு ஒரு மாற்றுவழி தான் இல்லையா?

அந்த வழிகளை இக்கட்டுரையின் 'முடிவில்' முடிவுரையாக கண்டுபிடிப்போம். அதற்கு முன்னர் இராமேஸ்வரம் சங்கீத கதாகாலட்சேபத்துக்கு 'நமஸ்தே' கூறிவிட்டு வாருங்கள் புதுடில்லிபோவோம். சில இடங்கள், பல கதைகள் வழியில் உண்டு.

# மாணவர் எண்ணம்

‘கண்டோஸ்’

எனது
அன்பான மாணவ
மாணவிகளுக்கு
தித்திக்கும்தீபாவளி
வாழ்த்துக்கள்!
கண்டோஸ்

## சித்தனைக்குச் சில நிமிடம்

பேபி ஒரு ரூபாவுக்கு 3 பழங்கள் வீதமும், தயா ஒரு ரூபாவுக்கு 2 பழங்கள் வீதமும் விற்பனை செய்வதற்காக தலா 30 பழங்களை வைத்திருக்கிறார்கள். ஆனந்தி, இருவரினது 60பழங்களையும் (2+3) 5 பழங்கள் 2 ரூபா வீதம் வாங்கிக்கொண்டு 24 ரூபாவைக் கொடுக்கிறார். ஆனால் தனித்தனி தத்தமது விலைப்படி பேபிக்கு 10 ரூபாவும், தயாவுக்கு 15 ரூபாவுமாக மொத்தம் 25 ரூபா கிடைத்திருக்கவேண்டும். கிடைத்ததோ 24 ரூபா. மிகுதி ஒரு ரூபாவுக்கு யார்பொறுப்பாளி? ஏன்......?

செல்வி ரஜினி பத்மநாதன்
யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

(பதில் அடுத்த வார எண்ணத்தில்.)

## அணுவின் தன்மை

அணுவை ஆக்கவேலைகளுக்கும், அழிவு வேலைகளுக்கும் பயன்படுத்திக்கொள்ள முடியும் இது விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புகளில தனித்துவமான சக்தியுடையதாகும். இதன் தீமையான விளைவுகளைக் கண்டுபிடித்துப் பயன்படுத்திய முன்னோடிகள் ஜெர்மனியாகும். இன்றைய உலகின் பேரச்சத்திற்கு உரிய அணு குண்டினை முதன்முதலாக ஓட்டோஹான் என்னும் ஜெர்மனியரே கண்டுபிடித்தார். இதனால் ஏற்படும தீமைகளை அளவிட முடியாது.

ஆனாலும் அணுவை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவும்முடியும். விமானங்கள், ரயில்கள், மோட்டார் வண்டிகள் போன்ற போக்குவரத்துக்கு உதவும் இயந்திரக் கருவிகளை இயக்குவதற்கும உணவுகளைப் பழுதடையாது பேணி வைத்திருப்பதற்கும், புற்றுநோயைக் குணடபடுத்துவதற்கும் அணுசக்தி மிகவும் வாய்ப்பானதாகும்.

அணு என்பது மேலும் பிரிக்கமுடியாத துகளாகும். அணுவில் அணுக்கரு உள்ளது. அணுவை ‘எலக்ரான்’கள் என்ற நுண்ணணுக்கள்; ஞாயிற்றுத்தொகுதியல் உள்ள கிரகங்கள் சூரியனை நீள்வட்ட ஒழுங்கில் சுற்றுவதைப் போன்று சுற்றுகின்றன. அணுக்கருவும், எலக்ரான்களும முன்னேற்றமுடையவை.

அணுக்கருவில் நேர்மின்னேற்றமும, எலக்ரான்களில் எதிர்மின்னேற்றமும் உள்ளனவாகும். எலக்ரான் எண் ஒழுங்குப்படி அணுக்களுக்கும் எண்களுட்டுள்ளார்கள். அதிகூடிய எலக்ரான்களுடையதும், பாரமுடையதுமான ரோனிய அணு (அணு இல 92 க கொண்டே அணு குண்டுசெய்யப்படுகின்றது.

க. சிவகாந்தன்.
யாழ். மத்திய கல்லூரி.

## கலைமகளைத் துதித்திடுவோம்

பொங்கி வரும் ஏடு
புதிய பொலிவு பெற
மாணவர் எண்ண மது
மகத்துவ மாய் விளங்க
தீபத் திரு நாளில்
துதித்திடு வோம்
கலைமகளை

ஆ. திருமுருகன்,
(யாழ். இந்துக்கல்லூரி)

# அன்புத் தோழன்

-சி. வி. குணசேகரம்-

[10]

எதிர்பாராத விதமாக புலி தாக்கியதால் விக்கிரமன் நிலத்தில் சரிந்தான், புலி அவனை உருட்டி உருட்டி கடிக்கத் தொடங்கியது.

சேதுபதி மரத்திலிருந்து குதித்து புலியினது வாலைக் கடித்தது. புலி வேதனையோடு உறுமியவாறு, விக்கிரமனைத் தாக்குவதை விட்டு விட்டு சேதுபதியைத் தாக்கவந்தது. உடனே சேதுபதி தாவி மரத்தில் ஏறியது.

விக்கிரமன் துள்ளி எழுந்தான். அவனது உடைவாள் நிலத்தில் விழுந்தது, புலி தாக்கியதால் அவனுடல் எங்கும் இரத்தம் பெருகியது. வேதனையாலும் களைப்பாலும் தள்ளாடினான். அவனுக்கு புலியை எதிர்க்கும் தைரியம் அப்போது இருக்கவில்லை.

சேதுபதி மரத்தில் தாவியதும் புலி ஆவேசத்துடன் மீண்டும் விக்கிரமன் மீது பாய்ந்தது. உடனே சேதுபதி விக்கிரமனது உடைவாளுக் கருகில் குதித்து வாளை எடுத்து புலியை வெட்டியது. புலி பலமாக உறுமியபடி திரும்பியது. சேதுபதி திரும்பவும் வெட்டியது. புலி நிலத்தில் புரண்டு துடிதுடித்தது.

சேதுபதி புலியை வெட்டுவதை விடுத்து மரத்தின் மீது தாவி விசில் அடித்தது. அச்சத்தம் கேட்ட நித்திய கல்யாணி பாய்ந்து வந்து விக்கிரமன் ஏறுவதற்காக நிலத்தில் படுத்து கொண்டது. விக்கிரமன் ஏறிக்கொண்டதும், துள்ளி எழும்பிய நித்திய கல்யாணி காற்றாய் பறந்தது. மரத்தில் இருந்த சேதுபதி தாவி விக்கிரமனின் பின் அமர்ந்து கொண்டது.

பகல்போல் நிலவு, காய்ந்து கொண்டிருந்தது. பசியும் தாகமும் விக்கிரமனை வாட்டியது. அத்தோடு புலி தாக்கிய காயங்கள் வலித்தன,

வழியில் சல சல வென்று நீர்பாயும் சத்தம் கேட்டது. விக்கிரமன் குதிரையை விட்டிறங்கி ஒரு மரத்தின் அடியில் இருந்து கொண்டான். அவனால் மேற்கொண்டு பிரயாணம் செய்ய முடியவில்லை. சேதுபதியும் நித்தியகல்யாணியும் நீரோடைக்குச் சென்று நீரைக் குடித்தன. சேதுபதி பெரிட இலை ஒன்றைக் கோலி நீர்மெண்டு வந்து விக்கிரமனுக்குக் கொடுத்தது,

விக்கிரமன் களைதீர நீரைப் பருகினான். சேதுபதி பச்சிலைகள் பிடுங்கிவந்து கல்லில் வைத்து குத்தி விக்கிரமனின் காயங்களில் பூசியது.

சேதுபதிக்கும் பசி வயிற்றைக் கிள்ளியது. மேலே அண்ணார்ந்து பார்த்தது. மரங்களில் பழங்கள் நிறைந்திருந்தன, மகிழ்ச்சிப் பெருக்கோடு மரத்தில் ஏறி பழங்களைப் பறித்து நிலத்தில் போட்டது பின் மரத்தால் இறங்கி அவற்றை எடுத்துச் சென்று விக்கிரமனுக்குக் கொடுத்து தானும் உண்டது.

விக்கிரமன் வலிதாங்க முடியாமல் பலமாக முனங்கினான்.

அப்போது அங்கே திடீரென மோகினிப் பெண் ஒருத்தி தோன்றினாள்.

[அடுத்த எண்ணத்தில்]

## எங்கே பிழைத்தது எழுத்து?

மண்குதிரை நம்பினாற் போல
மண்குதிரையை நம்பினாற் போல

ஃ ஃ

பாண்டியன், ‘‘சிலம்பைத் திருடிய கள்வனைக் கொண்டுவா’’ என்றான்.
பாண்டியன் ‘‘சிலம்பைத் திருடிய கள்வனைக் கொன்றுவா’’ என்றான்.

ஃ ஃ

ஈழத்துளவும் காளகத்து ஆக்கமும் காவிரிப்பூம் பட்டினத் துறையில் வந்திறங்கின.

ஈழத்துணவும் காளகத்து ஆக்கமும் காவிரிப்பூம் பட்டினத்தில் வந்திறங்கின.

செல்வி அ.மேரி,
யாழ். கன்னியர்மடம்
மகாவித்தியாலயம்



## பாலர் களித்திடத் தீபாவளி

பாலர் கண் பனித்திடத் தீபாவளி
பட்டாசு வெடித்திடத் தீபாவளி.
சாலையில் புதிதாடத் தீபாவளி
சாத்திரம் ஒலித்திடத் தீபாவளி.
வேலைகள் மறந்திடத் தீபாவளி
வேடிக்கை காட்டிடத் தீபாவளி.
மாலையில் காட்டிடத் தீபாவளி
மகேசுரன் ஆலயத் தீபாவளி.
பூதலம் களித்திடத் தீபாவளி
பூமண மஞ்சரித் தீபாவளி.

ஆசிரியர் சு. கதிர்காமத்தம்பி


BAYER

# ஹேகெம் லிமிட்டெட்

400 டீன்ஸ் வீதி,
கொழும்பு—10.

ஹேகெம் ஸ்தாபனத்தார்
தங்களால் தயாரித்து விநியோகிக்கப்படும்

**ப்பயர் (Bayer)**

விவசாய இரசாயனப் பொருட்களை
யாழ். குடாநாட்டில் விறபதற்கு கீழ்க் காணும்
நிலையங்கட்கு மட்டும் அனுமதி வழங்கியுள்ளனர்
என்பதை இத்தால் கமக்காரர்களுக்கு
அறிவிக்கிறோம்.

கலப்பற்ற

**ப்பயர் (Bayer)**

விவசாய இரசாயனப் பொருட்களை ஸ்தாபனம்
நிர்ணயிக்கும விலையில் இந்நிலையங்களில்மட்டுமே
நம்பிக்கையாகப் பெற்றுக்கொள்ளலாம்.

1. லட்சுமி நாராயன்ஸ், கே.கே. எஸ். வீதி, தெல்லிப்பழை.
2. கிருஷ்ணாஸ், கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பழை.
3. முருகன் கமக்களஞ்சியம், அப்பனைச் சந்தி, தெல்லிப்பழை.
4. ஆனந்தா சைக்கிள் வோக்ஸ், சுன்னாகம்.
5. குரூஸ, நியூமார்க்கெட், சுன்னாகம்.
6. கமக்காரர் களஞ்சியம், சுன்னாகம்.
7. பிளளையார் வவசாய சேவை, இணுவில்.
8. சீகோ, கே. கே. எஸ். வீதி, தாவடி.
9. சிறீ குமரன் ஸ்ரோர்ஸ். கோண்டாவில்.
10. முருகன் ஸ்ரோரஸ், புன்னாலைக்கட்டுவன்.
11. அக்ரோ விலாஸ், இடைக்காடு.
12. கயல்செல்ஸ் சென்ரர், இடைக்காடு.
13. ராசையா ஸ்ரோர்ஸ், அச்சுவேலி.
14. நாதன் ஸ்ரோர்ஸ், ஆவரங்கால் ரோட்டு. அச்சுவேலி.
15. கந்தையா ஸ்ரோர்ஸ், நவக்கிரி, புத்தூர்.
16. சிவன் ஸ்ரோரஸ், ராச வீதி, கோபபாய்.
17. அக்ரோ ஸ்ரோரஸ், பருத்தித்துறை வீதி, கோப்பாய்.
18. அக்ரோ தவாஸ், யாழப்பாணம்.
19. வாக்கர் சன்ஸ் கொம்பனி லிமிட்டெட், யாழ்ப்பாணம்
20. சாமுவேல் சன்ஸ் லிமிட்டெட், யாழ்ப்பாணம்.
21. அக்ரோஸ் லிமிட்டெட், யாழ்ப்பாணம்.
22. S. P. சாமி அன் கோ., யாழ்ப்பாணம்.
23. ஜோய்ஸ், பண்டத்தெருப்பு.
24. அன்ரனி காட்வெயர்ஸ், பண்டத்தெருப்பு.
25. சிறி அம்பாள் ஸ்ரோர்ஸ், பண்டத்தெருப்பு.
26. பாம் நீட்ஸ், தொட்டிலடி, சங்கானை.
27. சிறி அம்பாள் ஸ்ரோர்ஸ். வல்லை ரோட், சங்கானை.
28. விவசாயக் களஞ்சியம், சங்கானை.
29. சென்ற் அன்ரனி ஸ்ரோர்ஸ், ஊர்காவற்றுறை.
30. P. ஜேம்ஸ், ஊர்காவற்றுறை.
31. ராஜா காட்வேயர்ஸ், ஊர்காவற்றுறை.
32. முருகன் றைஸ் மில்ஸ், சாவகச்சேரி.
33. A. சோமசுந்தரம் அன் கோ., சாவகச்சேரி.
34. லீலாவதி ஸ்ரோர்ஸ், கைதடி.
35. காமதேனு, கொடிகாமம்.
36. கௌரி ஸ்ரோர்ஸ், கொடிகாமம்.
37. K. V. நடராசா, எழுதுமட்டுவாள்.
38. சரஸ்வதி ஸ்ரோர்ஸ், கமபர்மலை, வல்வெட்டித்துறை.
39. மொடேண் பாம் கவுஸ், நெல்லியடி.
40. அக்ரோ ஸ்ரோர்ஸ், நெல்லியடி.
41. சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி.
42. தயாஸ், கரணவாய், நெல்லியடி.
43. திருமகள் ஸ்ரேர்ர்ஸ், நெல்லியடி.
44. நடனமுருகன், நெல்லியடி.
45. S. V. முருகேசு, நெல்லியடி.
46. திஸ்ஸா ஸ்ரோர்ஸ், நெல்லியடி.
47. சகல பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்களும் விவசாய சேவை நிலையங்களும்.

மு. க.:- இவை தவிர்ந்த வேறிடங்களில் வாங்கி ஏமாறாதீர்கள். நம்பிக்கை வாய்ந்த ப்பயர் (BAYER) இரசாயனப் பொருட்களைப் பாவித்து உங்கள் பயிர்களைப் பாதுகாத்து நற்பயன் அடைவீர்களாக.

**க. நா. ஜெயசீலன்**

(ஹேகெம் ஸ்தாபன வட பிராந்திய தொழில் நுட்ப ஆலோசகர்)

‘‘ஈஸ்வர இல்லம்’’
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

0642

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவகுமார்-லோறன்ஸ்
மேல்நாட்டு மருமகள்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம் ஜி. ஆர்-விஜயா
நல்லநேரம்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
நிலவே நீ சாட்சி
(புதியபிரதி)

லிடோ (யாழ்.நகர்)
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
எங்கள் தங்க ராஜா

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30 & 9-45
எம். ஜி. ஆர். --- சரோஜாதேவி
நடித்த
திருடாதே [புதிய பிரதி]

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m,
SYDNEY JAMES in
THE BIG JOB [Colour]

சாந்தி (யாழ்ப்பாணம்)
தீபாவளித் துணை விருந்து!
போன்: 7642.
தினசரி -30, 2-30, 6-30, 9-45
ஏ. வி. எம். ராஜன், நிர்மலா, சந்திரபாபு, மனோரமா
அவள் புதிய பிரதி வண்ணப்படம்

175வது தின வெள்ளி விழாவை நோக்கி வீறுநடை போடுகிறான்.
தினசரி 4 காட்சிகள்
ராணி (யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன் (ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., அஞ்சலிதேவி
நடித்த
மர்மயோகி (புத்தம்புதிய பிரதி)

ராஜா (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
ஃ மரிக்கார் ராமதாஸ்
ஃ ஹெலன்குமாரி
செல்வசேகரன்-சிவராம் - ஜவாகர்-ராஜகோபால்
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
ஏமாளிகள்

தீபாவளி வெளியீடு!
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
∴ சிவராம் ∴ சந்திரகலா
தனரத்தினம் - அனோஜா
செல்வம் பெர்னாண்டோ
டொன் பொஸ்கோ
மாஸ்டர் ஹஷி
ஆகியோர் நடித்த
சமத்கார பிலிம்ஸ்
அநுராகம்

## ஜயந்தி.....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னவாயிருந்தாலும், முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்ததை- அன்று நீ என்மேல் எறிந்த வேல்விழியை இன்னமுமா நினைவில் மீட்க முடியுமென்கிறாய்? உள... ஹூம்-''

'அப்படியென்றால் நம்ம வீட்டிலே ஒரு கல்யாணத்தை நடத்தி அது மாதிரி ஒரு களத்தைத் தோற்றுவித்து நேரில் பார்த்திட சம்மதமா, சொல்லுங்கள்!''

மனையாள் முன் வைத்த யோசனைக்கு ''உன்சமர்த்தாக நடக்கட்டும்'' என்று அதற்குமேல் எதற்குமே துணிய செயலற்று சுருண்டு படுத்து விட்டான் சிற்பி-

இந்த விதமாக சிற்பியின் வீட்டில் அவன் சொந்தப்புதல்வனையே மணமகனுக்கி சிற்பியின் மனையாள் முன்னின்று நடாத்தி வைத்த கல்யாணத்தில் உள்ளொளி பிரகாசிக்கும் புதுப்பெண்ணின் விழி நோக்கை மறைந்திருந்து அவதானித்து அதனை மனதில் கிரகித்துக்கொண்டு சிற்பி பொறித்த கண்கள் தாம் இதோ இந்த பார்வதி சிலையில் இன்னமும் ஜீவத்துடிப்புடனே ஒளிர்வதை நீவிர் பார்க்கிறீர்—

''உங்கபிள்ளை, புதுப்பெண் கூட மணவாளக் கோலத்தில் எழுந்தருளியிருக்கிறான். மறைந்து நின்று பாருங்க. நானும் அவர் முன்தோற்றி ஏதொன்றும் பேசாதிருந்து விடப்போகிறேன். அதற்கு மேல் பாருங்களேன் அவர் இருபேர் முகபாவங்களை மொழிபேசும் விழி நோக்குகளை! ஒன்றல்ல, நவம் நவமாக நூறு சிற்ப வடிவங்களையே செதுக்கி விடுவீர்கள்!'' என்று வீட்டு மூலைக்குள்ளே முடங்கிக் கிடந்த சிற்பியிடத்தே அவன் மனையாள் ஏகி காதுக்குள் ஓதிய மாத்திரத்தே ''ஆரடி, நம்ம பயல் கோவிந்தனடி, அவனடி புதுப் பெண்டாட்டி கூட வந்திருக்கிறான்!'' என்று கேட்டுத்துள்ளி எழுந்தான்சிற்பி. ஓடிச்சென்று அவன் மனையாள் அறிவுரைத்தபடி மறைவாக ஓரிடத்தே நின்று பொண்ணும் மாப்பிள்ளையும் பார்த்தான். தேடிய புதையலும் கிடைத்தது. தங்களை வரவேற்க யாருமே இல்லாமல் வீடு வெறிச்சோடிப்போய்க் கிடந்த நிலையில் புதுஜோடி ஆங்கொருபால் தனித்தொதுங்கி நிற்க அது சமயமாக ஒருபோது வெளியே எட்டிப்பார்த்த சிற்பலங்காரிகை அவர்களைக் கண்ணுற்றதுமே கதவைப்பளார் என அறைந்து மூடிக்கொண்டு தலையையும் விறுக்கென உள்ளே இழுத்துக் கொள்கிறாள்.

## கவிஞர் கண்ண...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

''உங்களுக்கு கொள்கை என்று ஒன்று இல்லையாம்! இப்படித்தான அவர்கள் கூறுகின்றார்கள்...'' என்றேன் நான்!

கவிஞர் அடுத்து என்ன சொல்லப்போகின்றார் என்பதை அறிய ஆவலாக இருந்தேன். இந்தக் கேள்வியை நான் 'பச்சை'யாகவே கேட்டுவிட்டதால் 'தாக்கமும்' சற்று அதிகமாக இருக்கலாமென்று எதிர்பார்த்தேன். இயற்கை தானே?

''மக்கள்- அதுதான் நீங்கள் கூறும் 'அவர்கள்' என்ன சொல்றாங்க...?'' கவிஞர் திரும்பக்கேட்டார்.

''உங்களுக்கு ஒரு தனிக் கொள்கை இல்லையாம் கொள்கை எதுவும் இல்லாதவர் கவிஞர் என்று கூறுகின்றார்கள்'' என்றேன் நான்!

[அடுத்த வாரம்]

Rio (Jaffna)
Phone: 7607
Dly 4 Show
ADRIFT
(Adults Only)

இன்றைய தினம் (29-10-78) கீரிமலை சிவநெறிக் கழகம் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை அவர்களுக்குக் கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானத்தில் பண்டிதர் சி. நமசிவாயம் தலைமையில் நடாத்தும் பாராட்டுவிழாவினையொட்டிச் சிவநெறிக் கழகக் கவிஞர் வி. கந்தவனம் அவர்களின் இக்கவிதை பிரசுரிக்கப்பெறுகின்றது. (ஆ—ர்)

## ஞாலமா மேதை

சிலமார் தென்ம ராட்சி
 செய்தவச் சிறப்பாற் பெற்ற
ஞாலமா மேதை யார்க்கும்
 நயமுற வுரைக்கும் ஞானி
காலமா கால மாகக்
 கதிதர வல்ல நல்ல
மூலமா பொருளைக் காட்டும்
 முனிவரெம் முதுசொம் வாழி!

பண்டித மணியென் பார்கள்
 பைந்தமிழ்க் கனியென் பார்கள்
கண்டநன் முனியென் பார்கள்
 ற்பகக் கனியென் பார்கள்
திண்டிறல் மதியென் பார்கள்
 சீர்கலா நிதியென் பார்கள்
எண்டிசை யாரும் போற்ற
 எங்களின் ஐயா வாழி!

உறுபொரு ளாளர் அள்ளி
 உதவிடும் உண்மை வள்ளல்
நிறைவுகொள் சிந்தை யாளர்
 நேரிய கொள்கை யாளர்
முறையுள தர்க்க நாதர்
 மூச்சுள வசன கர்த்தர்
இறைவனின் அருளால் என்றும்
 எமக்கருங் கலமாய் வாழி!!

கழகக் கவிஞர் வி. கந்தவனம்.

## விவசாயிகளே

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

தன்மையையமேலுங்கூட்டுவதாகில் சிறிது பச்சைச் சாணகக் கரைசல் சேர்க்கலாம். வேறு ஏதாவது சேர்த்து சக்தியைக் கூட்ட முடியுமா என்பதை ஒவ்வொருவரும் ஆராய்ந்து பாருங்கள். கோசலம் உஷ்ணத்தன்மையுடையது. பயிர்கட்கு நீரிறைப்பதில் கவனம் செலுத்த வேண்டும். கிழங்குப் பயிர்கட்கு கிழங்கு பருக்குங் காலத்தில் மாத்திரம் நீருடன் கலந்து இறைக்க வேண்டும். இலைப் பயிர்களுக்கு செடிவளருங் காலத்தில் கோசலம் நீருடன் கலந்து இறைக்கலாம். கோசலத்தின் தன்மை மாடுகளின் தன்மைக்கேற்ப வித்தியாசப்படும். இதனல் அளவைக் கூட்டிக்குறைப்பது அவரவர் அனுபவத்தில் தெரிந்து கொள்ள வேண்டும். மேலுக்குத் தெளிப்பதோடு நிலத்திற்கும் ஒரு சிறிதளவாவது நீருடன் கலந்து இறைப்பது நல்லது. தெளிப்பதைவிட்டு நிலத்திற்கு நீருடன் கலந்து கலந்துஇறைப்பதன் மூலம் நோய்கள் வராமல் கட்டுப்படுத்தலாம் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இதில்ஒரு சிறிதளவு வெற்றி பெற்றிருக்கிறேன். வசதியானவர்கள் இந்த ஆய்வை செய்து பாருங்கள். நோய்கள் வந்தபின் மாற்றுவதைவிட வராமல் காப்பது நல்லது. செயற்கை உரங்களுக்குப் பதிலாக கோசலத்தைப் பயன்படுத்தினல் நிலத்திற்கு நல்லது. ஒரு சாதாரண நல்ல இனமாடு வளர்த்து கோசலம் முழுவதும் சேகரித்தால் 10, 12 பரப்பிற்குப் பயிர் செய்வதற்குப் போதுமானது. கலப்பில்லாத பாலும்குடிக்கலாம். போதிய கோமயமும் பெறலாம். விவசாயம் செய்யாதவர்கள் கோசல வியாபாரமும் செய்யலாம்.

இதுவரை கூறப்பட்ட வற்றை அவதானத்தோடு செய்துபார்த்தால் கோசலத்தின் அருமைபெருமை தெரிய வரும். செயற்கை உரங்களும் நச்சு மருந்துகளும் தேவையில்லை. இவற்றுக்காக செலவிடும் பணமும் அந்நியச் செலாவணியும் மிஞ்சும். நஞ்சற்ற சுவையுடைய உணவையும் பெறலாம். மக்களுக்கும் நன்மையுண்டு. மாடு கட்ட வசதியில்லாதவர்கள் இயன்ற அளவு கோசலந் தெளித்து நிலத்தைப் பண்படுத்தி ஒரு கிழமையின்பின் பயிரிடவும்.

இதுவரை எனது அனுபவத்தைக் கூறினேன். விவசாயிகளே, விவசாய விஞ்ஞானிகளே, ஆராய்ச்சியாளர்களே, நச்சு மருந்துகளை நீக்கி கோசலத்தை கிருமி நாசினியாக மாற்றுவதில் உங்கள் ஆய்வுகள் தொடரட்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

கோசலத்தை நீரகற்றி (ரின் பால்போல) புட்டிகளில் அடைத்து விற்க வேண்டிய காலம் கூடிய கெதியில் ஏற்படும் என்பதை இப்பொழுதே கூறிவைக்க விரும்புகின்றேன்.

செயற்கை உரங்களை நீக்குவோம்.!

நச்சு மருந்துகளையும் நீக்குவோம்.

கோசலத்தைப் பயன்படுத்துவோம்.!

நிலத்தைப் பாதுகாப்போம்.!

நலம் பெறுவோம்.!

ஆய்வுகள் மேலும் தொடரட்டும்.

## யாருடையது?

யாழ். - ஊர்காவற்றுறை வீதியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுரேன் கிறிஸ்தோபரினல் கண்டெடுக்கப்பட்ட பெரிய திறப்புக்கோர்வை ஒன்று 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

788 பாதை இலக்கத்தைக் கொண்ட 23 ஸ்ரீ 2247 இலக்க பஸ்ஸில் பிரயாணி ஒருவரால் விடுத்துச் செல்லப்பட்ட சிறு பை (வல்லுவம்) ஒன்றை பஸ் காப்பாளர் என். ஜெயரட்ணம் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் பெற்றுக்கொள்ளலாம்,

## தீபாவளியன்று வானொலி நிகழ்ச்சி

நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இலங்கை வானொலி தமிழ்ச்சேவை I-ல் டாக்டர் பா. சோ. பாரதி எழுதிய ''தீபத் திருநாள்'' இசைச்சித்திரம் ஒலிபரப்பாகும் இதன் மறு ஒலிபரப்பு வருகிற2-11-78இரவு10-15க்கு ஒலிபரப்பாகும்.

இத்துடன் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் எழுதிய நாட்டிய நாடகம் ''சீதாபஹரணம்'' தீபாவளியன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பப்படும்.

# வடக்கையும் கிழக்கையும் எந்தச் சக்தியாலும் பிரிக்க முடியாது

## யாழ். எம். பி. யோகேஸ்வரன் உறுதி

(யாழ்ப்பாணம்)

"இன்றைய அரசாங்கம் மலையக மக்களையும், வடபகுதி மக்களையும் பிரிப்பதற்கு முயற்சிசெய்தது. இன்று வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்கு முயற்சிசெய்கிறது. அது ஒருபோதும் நடக்காது. எம்மை எந்தச் சக்தியாலும் பிரிக்க முடியாது."

இவ்வாறு நேற்று யாழ்ப்பாணம் "ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள ஸ்ரான்லி சையன்ஸ் சென்ரர் என்ற தனியார் கல்வி நிறுவனத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்தொடர்ந்து தமதுரையில் கூறியதாவது இன்றைய தமிழ்மக்கள் மத்தியில் அரசியல் பொருளாதார இன்னல்களால் விரக்தி நிலை ஏற்பட்டிருக்கின்றது இந்த நிலையில் சிலர் தமிழ்மக்கள் மத்தியில் விஷமத்தனமான வதந்திகளைப் பரப்ப முயற்சிக்கிறார்கள் இந்நிலையில் தமிழ்மக்கள் மத்தியிலிருக்கின்ற ஐயங்களைத் தெளிவு படுத்த வேண்டியது ஒவ்வொரு தமிழ்த்தலைவர்களது தலையாயபணியாகும்.

"எந்த இலட்சியத்தை முன்வைத்து நாம் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றோமோ அந்த இலட்சியத்தை அடைவதற்கு நாம் ஒருக்காலும் பின்னிற்க மாட்டோம். இலட்சியம் ஈடேறாத பட்சத்தில் கூட்டணி எம்.பிக்கள் பேரவை உறுப்பினர் பதவிகளைத் துறப்பதற்குப் பின்னிற்கமாட்டோம்.

### தனியார் கல்வி நிலையங்கள்

தனியார் கல்வி நிறுவனங்கள், எமக்கு மிகத்தேவை. ஆனால் அவை ஒழுங்காகவும் நேர்மையாகவும் இயங்க வேண்டும். இந்நிலையங்களை நம்பிவரும் மாணவர்களின் கல்வித்தேவையை நிறைவேற்ற வேண்டும் அன்றியும் இன்னொரு முக்கியமான சேவையும் தனியார்கல்வி நிறுவனங்களைச் சார்ந்திருக்கிறது. அதுதான் மொழிப் பற்றையும் இனஉணர்வையும் இளைஞர்இடையே வளர்க்கும் பணியாகும் இந்தச்சேவையை அரசகல்வி நிறுவனங்களில் நாம் எதிர்பார்க்க முடியாது

தொழிலதிபர் திரு. எஸ் தியாகராஜா இவ்விழாவில் பேசுகையில யாழ்ப்பாணத்து இளைஞர்கள் ஏராளமானவர்கள் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்றுள்ளதாகவும், அவர்களில் பெரும்பாலானோரும் தனியார் பேராதனை நிலையங்களில் பயின்றவர்களே என்றும் சொன்னார்.

நிறுவன இயக்குநர்கள் திருவாளர்கள் க. ரவீந்திரநாதன், ஆ. விவேகானந்தன், ஆசிரியர் திரு. வி எஸ் சிவகுமாரன் ஆகியோரும் உரையாற்றினர். ]கெ-இ]

## ஆளும் மாடும் இடிக்குப்பலி

(யாழ்ப்பாணம்)

மாட்டுடன் வயலிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த ஒருவர் இடி விழுந்து மரணமானார்: அவருடன் மாடும் மாண்டது. கனகாம்பிகைக் குளத்தைச் சேர்ந்த எம் அப்புத்துரையே(வயது 45) இவ்விதம் பரிதாபமாக மாண்டவராவார். மரண விசாரணை நடத்திய திரு எம் யோகலிங்கம் விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்.

சங்கானை-சாவகச்சேரி பஸ் கொள்ளை:

## சந்தேகநபர்கள் அடையாளம் காட்டப்படவில்லை

(கொடிகாமம்)

சாவகச்சேரி சங்கானை பஸ் கொள்ளை அடையாள அணி வகுப்பில் சந்தேகநபர்கள் எவரும் அடையாளம் காட்டப்படவில்லை.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் பதில் நீதிபதி எஸ். கே. திரவியநாயகம் முன்னிலையில் இந்த அடையாள அணி வகுப்பு நடைபெற்றது.

சந்தேக நபர்களான எஸ். சந்திரசிவம் (உரும்பராய்), எஸ். நகுலேஸ்வரன்[அராலி], எம். வரதலிங்கம் [நுணுவில்], வி. துரைத்தினம் [மானிப்பாய்] ஆகியோர் இடம்பெற்றனர்.

சந்தேகநபர்கள் மூடி மறைக்கப்பட்ட வாகனத்தில் நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டனர்.

சாட்சிகளாக பஸ் சாரதி கந்தர் துரைராசா, கண்டக்டர் சின்னையா சுப்பிரமணியம், பிரயாணி நன்னித் தம்பி இளையதம்பி அழைக்கப்பட்டிருந்தனர். சாட்சிகள் எவரும் சந்தேகநபர்களை அடையாளம் காட்டவில்லை.

### சட்டத்தரணி ஆட்சேபம்

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி செ. அம்பிகைபாலன், அடையாள அணிவகுப்புக்கு ஆட்சேபம் தெரிவித்தார்.

78-ம் அண்டு ஜூன் 18-ம் திகதி இரவு 7-45 மணிக்கு சாவகச்சேரி சங்கானை பஸ்ஸின் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்கருகில் துப்பாக்கி முனையில் நான்கு இளைஞர்கள் 129 ரூபா 90 சதத்தை கொள்ளையடித்த சம்பவம் தொடர்பாக இந்த அடையாள அணிவகுப்பை ஆட்சேபித்து கூறியதாவது செப்டம்பர் மாதம் 4-ம் திகதி சந்தேகநபர்கள் நல்லூர் கோவிலில் கைதுசெய்யப்பட்டு ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் 3 நாட்களும், பின் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும்வைத்து முரட்டுத்தனமாக பொலிசாரினால் தாக்கப்பட்டு பல காட்சிகள் இவர்களை காணக்கூடிய விதத்தில் வைக்கப்பட்டனர். பின் 11-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

10-10-78-ல் சந்தேக நபரான வரதலிங்கம் யாழ் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடர்பாக திறந்தநிலையில் சாட்சிகள்பார்க்கக்கூடியவிதத்தில் கொண்டுவரப்பட்டார். நீதிமன்றத்தில் பகிரங்கமாக ஆஜர்செய்யப்பட்டனர்.

4 சந்தேகநபர்களும் யாழ். நீதிமன்றத்தில் நடந்த அடையாள அணிவகுப்பில் இடம் பெற்றனர். அங்கு சாட்சிகளாகச் சென்றவர்கள் அவர்களைப் பார்த்தனர். ஆதலால் சந்தேகநபர்களுக்கு அடையாள அணிவகுப்பு நடத்துவது பலனில்லை.

இவற்றை பதிவுசெய்த பதில் நீதவான் அடையாள அணிவகுப்பை நடத்தினர், இதன்பின் சந்தேகநபர்கள் அடையாளம் காட்டப்படாததனால், அவர்களைப் பிணையில் விடுமாறு செ. அம்பிகைபாலன் கேட்டுக்கொண்டார்.

நிரந்தர நீதவான் இல்லாததால், பிணையில் விடவில்லையென்று கூறிய பதில் நீதவான் நவம்பர் 2-ம் திகதி வரை சந்தேகநபர்களை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

பொலிஸ்தரப்பில்சார்ஜன்ட் கந்தசாமி ஆஜரானார். ]க]

## 2வது டெஸ்ட்: பாகிஸ்தான் மீண்டும் விளாசல்

லாகூர், அக். 28

இந்திய-பாகிஸ்தான் 2-வது டெஸ்டின் 2-ம் நாள் ஆட்ட நேர முடிவில் பாகிஸ்தான் தனது முதல் இன்னிங்ஸில் இந்தியாவைவிட 150 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அதன் வசம் ஆறு முதல் இன்னிங்ஸ் விக்கட்டுகளும் உள்ளன

ஒரு விக்கட் இழப்புக்கு 28 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இன்றைய ஆட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான் ஆட்ட நேர முடிவில் 4 விக்கட்டுகளை இழந்து 349 ஓட்டங்களைப் பெற்றது

நேற்றையதினம் 'நைட் வாட்ச்மன்' ஆக ஆடவந்த வாஷிம்பரி இன்று 85 ஓட்டங்களை எடுத்து புதிய சாதனை ஒன்றை ஏற்படுத்தினர்

மஜீட்கானின் விக்கட்டை விழ்த்தியதுடன் இந்திய காப்டன் பிஷன்சிங்பேடி 250 விக்கட்டுகளைக் கைப்பற்றிய பெருமையைப் பெற்றுக் கொண்டார்

ஆட்டநேர முடிவில் முதல் டெஸ்டில் 176, 93 ஓட்டங்களைப் பெற்ற ஸாகிர் அப்பாஸ் ஆட்டமிழக்காது 128 ஓட்டங்களையும் அதே டெஸ்டில் ஆட்டமிழக்காது 164ஓட்டங்களைப்பெற்ற மியன்டாட் 30ஓட்டங்களுடனும் ஆடிக் கொண்டிருந்தனர் (இ)

## யாருடையது?

தமிழர் விடுதலைக்கூட்டணி தலைமைப்பணியகத்திற்கு முன்பாக திரு. எஸ். பொன்னுச்சாமி என்பவரால் கண்டெடுக்கப்பட்ட திறப்பொன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி பெற்றுக்பெற்றுக் கொள்ளலாம். (இ)

பல்கலைக்கழக கமிஷன் விசாரணை

## "யாழ்ப்பாணக் கல்லூரியைக் கொடுக்க நிர்வாகத்தினர் மறுத்தனர்"

### உதவிப் பதிவாளர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

அமைச்சர் பீட்டர் கெனமனும் பல்கலைக்கழக அதிகாரிகளும் யாழ்ப்பாண கல்லூரியை வந்து பார்வையிட்டனர். அதன் பின் யாழ்ப்பாணகல்லூரி சுவீகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழக கமிஷன் விசாரணை முன் சாட்சியமளித்த யாழ். வளாக சிரேஷ்ட உதவிப்பதிவாளர் திரு. ஜே. எச். அரியரத்தினம மேற்கண்டவாறுகூறினார்.

கமிஷனர் டி. ஐ. தயாரத்தின் முன்னிலையில் நடந்த இவ்விசாரணையில் அரியரத்தினம் மேலும் கூறியதாவது யாழ்ப்பாணக் கல்லூரியை அரசாங்கம் வளாகத்துக்காக எடுப்பதுபற்றி யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சுதந்திரக்கட்சி அரசுக்குமிடையில் எந்தவித ரகசிய ஒப்பந்தமும் எந்படவில்லை.

வளாகத்திற்காக யாழ்ப்பாணக்கல்லூரியும் சுவீகரிக்கபடலாம் என்று கூறப்பட்டது இதனையடுத்து யாழ்ப்பாணக் கல்லூரி நிர்வாகிகள் அமைச்சரை சந்தித்தனர். யாழ்ப்பாணக்கல்லூரியை அரசாங்கம் சுவீகரிக்கக்கூடாது என்று அவர்கள் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தனர். இதுபற்றி ஒரு மஜரையும் அமைச்சரிடம் கையளித்தனர்

இதன்பின் 74-ம் ஆண்டு கல்விஅமைச்சு மீண்டும் யாழ்ப்பாணக்கல்லூரி நிர்வாகத்தைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. அங்கு அமைச்சர் யாழ் வளாகத்தை அமைப்பதற்கு கட்டடத்தையும் அதற்கான வசதிகளையும் செய்து தர முடியுமா? என்று கேட்டார். இதற்கு நிர்வாகத்தினர் காரணங்களை காட்டி மறுத்துவிட்டார்.

## கூட்டணி பணிமனை முன் உண்ணாவிரதம்

[யாழ்ப்பாணம்]

'இந்தியாவிலும், இலங்கையிலும் தனித்தமிழ்நாடு வேண்டாம்' என்ற துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டு, லங்கா-பாரத ஒற்றுமை முன்னணித் தலைவர் டாக்டர் ஆ. தர்மலிங்கம் நேற்று முழுநாளும் தமிழர் விடுதலைக் கூட்டணி பணிமனை முன் உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

டாக்டர் தர்மலிங்கத்துடன் ஒரு சிலர் நீண்டநேரமாக வாக்குவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். மாலை இறைபுகழ்வாழியும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார. ]கெ-இ[

## தமிழ் ஈழம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பொதுக்கூட்டத்தை ஒத்தி வைப்பதற்கு தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவரும் இளைஞர்களின் அபிமானத்தைப் பெற்ற எம்பிக்கள் சிலரும் எடுத்துக்கொண்ட முயற்சியும்கூடத் தோல்வியில் முடிந்ததாகக் கூறப்படுகிறது

## ஏற்கக்கூடாது என்கிறது மகளிர் பேரவை

மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று தமிழ் மகளிர் பேரவையும் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் கூடி ஒரு தீர்மானம் நிறை வேற்றியிருக்கிறது.

இன்று தமிழ் இளைஞர் பேரவையும் இன்றைய அரசியல் நெருக்கடி பற்றி ஆராய்ந்து ஒரு தீர்மானம் நிறைவேற்றி அதன் முடிவை இன்று மாலை யாழ். முற்றவெளி மைதானத்தில் நடத்தவிருக்கும் பொதுக்கூட்டத்தில் பகிரங்கமாக அறிவிக்கவிருக்கிறது.

## இன்று கூடும் மத்தியசெயற்குழு

இதேசமயம் தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்திய செயற்குழுவின் விசேட கூட்டம் இன்று கூட்டணியின் தலைமை அலுவலகத்தில் நடைபெறுகிறது மாவட்டஅமைச்சர் பதவி உட்பட இன்றைய அரசியல் நெருக்கடி பற்றியும் விவாதிக்கவிருக்கிறது.

மாவட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் தமிழ்ஈழக் கோரிக்கையை அடைவதற்கும் முதற்படியாக மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்க வேண்டுமென்ற பிரச்னை சம்பந்தமாக சில எம். பிக்கள் கூட்டணியிலிருந்தும் எம் பி பதவியிலிருந்தும் ராஜினமாச் செய்யலாமென்றும் கூட்டணி வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது

]1-ம் பக்கத்தொடர்ச்சி[

அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திட்டமிட்டபடி தமிழ் இளைஞர் பேரவையின் அமைப்புச் செயலாளர் திரு. த. சந்ததியார் தலைமையில் பொதுக் கூட்டம் இன்று மாலை நடைபெறுகின்றது. [ஊ[

## தமிழர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வடிக்கை மேற்கொண்டுவருகிறது என்றும் திரு ஜெயவர்த்தன கூறினார்.

அவர் மேலும்கூறியதாவது:

### சகல விஷயங்களிலும் கருத்து ஒற்றுமை

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே சகல விஷயங்களிலும் முழு அளவிலான கருத்து ஒற்றுமை நிலவி வருகின்றது. இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாயுடன் இன்றும் நேற்றும் நடத்திய பேச்சுவார்த்தைகள் கருத்து ஒற்றுமையை மேலும் தெளிவாக்கியுள்ளது.

இலங்கையின் உத்தேச சுதந்திர வர்த்தக வலயத்தில் இந்திய முதலீட்டாளர்கள் அதிக அளவில் முதலீடுசெய்யவேண்டும் என்றும் திரு ஜெயவர்த்தன வலியுறுத்திக் கூறினார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu PostBox 49, Telegram Eelanaadu, Telephone 389. Registered Newspaper in Srilanka.